**தலைப்பு – 105 - பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மற்றும் அந்த அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2014 ஆம் ஆண்டு**

இந்த அறிக்கையின் 1 ஆம் பந்தி முதல் 2 ஆம் பந்தி வரை அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் தொடர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் 3 ஆம் பந்தி முதல் ஒவ்வொரு தலைப்பிற்குமான கணக்காய்வு அவதானிப்புக்கள் காண்பிக்கப்பட்டுள்ளன.

**1. அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்**

| **தலைப்பு** | **திணைக்களம்** |
| --- | --- |
| 218 | சமுர்த்தி ஆணையாளர் நாயகத் திணைக்களம் |
| 281 | கமநல அபிவிருத்தி திணைக்களம் |
| 305 | மலைநாட்டு உழவர் மறுசீரமைப்புத் திணைக்களம் |

1.1 **கணக்காய்வின் நோக்கெல்லை**

மேற்படி 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மற்றும் மூன்று திணைக்களங்களின் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுக்கள், பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகள் கீழே காட்டப்பட்டுள்ள திகதிகளில் அவ்வமைச்சு மற்றும் திணைக்களங்களின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கும் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கும் வழங்கப்பட்டன. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டனவாகும்.

| தலைப்பு | அமைச்சு / திணைக்களம் | முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகள் வழங்கப்பட்ட திகதி |
| --- | --- | --- |
| 105 | பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | 2015.09.25 |
| 218 | சமுர்த்தி ஆணையாளர் நாயகத் திணைக்களம் | 2015.07.27 |
| 281 | கமநல அபிவிருத்தி திணைக்களம் | 2015.08.14 |
| 305 | மலைநாட்டு உழவர் மறுசீரமைப்புத் திணைக்களம் | 2015.07.21 |

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணப்படுதல், தயாரிக்கப்படல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பிக்கப்படல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக்கூடிய தவறான கூற்றுக்கள் அற்ற கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பிக்கப்படுவதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் நடாத்தலும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்குகள்

### 2.1 ஓதுக்கீட்டுக் கணக்கு

#### (அ) மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 03 திணைக்களங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 107,885.80 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியில் இதில் ரூபா 107,667.06 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அமைச்சினதும் திணைக்களங்களினதும் தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்தான சேமிப்புக்கள் ரூபா 1.44 மில்லியனிற்கும் ரூபா 173.99 மில்லியனிற்கும் இடையிலான வீச்சில் காணப்பட்டது. விபரம் பின்வருமாறாகும்.

| தலைப்பு | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | சேமிப்புக்கள் தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| 105 | 85,879.51 | 85,705.52 | 173.99 | 0.20 |
| 218 | 15,509.93 | 15,503.51 | 6.42 | 0.04 |
| 281 | 6,474.74 | 6,437.84 | 36.90 | 0.57 |
| 305 | 21.62 | 20.18 | 1.44 | 6.66 |
| மொத்தம் | 107,885.80 | 107,667.05 | 218.75 | 0.2 |

#### (ஆ) வேறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளின் பயன்பாடு

பல்வேறு பணிகளுக்காக ஏனைய 04 அமைச்சுக்களாலும் திணைக்களமொன்றினாலும் ரூபா 489.65 மில்லியன் நிதி ஏற்பாடு கமநல அபிவிருத்தி திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிஏற்பாட்டில் ரூபா 290.15 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் படி மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 199.50 மில்லியன், அதாவது, வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் 40.74 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.2 முற்பணக் கணக்கு

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாரளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 03 திணைக்களங்களுக்குரிய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | செலவு | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| விடய இலக்கம் | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| | ரூபா. மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 10501 | 170.00 | 169.17 | 90.00 | 109.57 | 600.00 | 369.54 |
| 21801 | 12.00 | 9.81 | 8.50 | 10.80 | 90.00 | 46.94 |
| 28101 | 210.00 | 190.04 | 140.00 | 140.86 | 800.00 | 388.62 |
| 30501 | 2.00 | 1.14 | 0.80 | 2.06 | 8.00 | 2.83 |

## 2.3 கட்டுநிதிக் கணக்குகள்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சு மற்றும் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் கட்டுநிதி மீதிகள் முறையே ரூபா 515.462 மில்லியனும் ரூபா 0.25 மில்லியனுமாக இருந்தன.

## 2.4 பொது வைப்புக் கணக்கு

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 03 திணைக்களங்களின் பொது வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 4,248.166 ஆக இருந்தது. அது தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

| அமைச்சு / திணைக்களம் | வைப்புக் கணக்கு இல. | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | ரூபா. மில்லியன் |
| பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | 6000/0000/00/0015/0019/000 | 379.35 |
| சமுர்த்தி ஆணையாளர் நாயகத் திணைக்களம் | 6000/0000/00/0015/0099/000 | 3,454.49 |
| கமநல அபிவிருத்தி திணைக்களம் | 6000/0000/00/0015/0136/000 | 261.82 |
| | 6000/0000/00/0006/0051/000 | 151.69 |
| | 6000/0000/00/0002/0010/000 | 0.23 |
| | 6000/0000/00/0001/0010/000 | 0.01 |
| | 6000/0000/00/0013/0024/000 | 0.39 |
| மலைநாட்டு உழவர் மறுசீரமைப்புத் திணைக்களம் | 6000/0000/00/0015/0160/000 | 0.18 |
| **மொத்தம்** | | **4,248.17** |

**2.5 கணக்காய்வு அவதானிப்புகள்**

2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், அமைச்சினதும் திணைக்களங்களினதும் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புகளுக்கு உட்படத் தயாரிக்கப்பட்டிருந்தன. அந்த முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியிலிருந்து 6 ஆம் பந்தி வரையான பந்திகளில் காண்பிக்கப்பட்டுள்ளன.

**3. தலைப்பு 105 – பொருளாதார அபிவிருத்தி அமைச்சு**

**3.1 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை**

அமைச்சினால் கீழே காண்பிக்கப்படுகின்ற சில பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன், சில பதிவேடுகள் நாளதுவரையாக்கப்பட்டு பேணப்படாதிருந்தமையும் தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (i) | காசோலை மற்றும் காசுக் கட்டளைப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 451 | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | கடமை தொலைபேசி பதிவேடு | நிதிப்பிரமாணம் 845(1) | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்கள் உள்ளடக்கப்பட்ட பிணைப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | மின் உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (v) | எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கிகள் இருப்புப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 1647(ஈ) | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (vi) | கொள்வனவுக் குழுவினதும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினதும் வருகைப் பதிவேடு | அரச கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் 2.11.2 வழிகாட்டல் | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (vii) | கொள்வனவுக் குழுக்களின் கூட்ட அறிக்கைகள் | அரச கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் 2.11.3(அ) வழிகாட்டல் | நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை. |
| (viii) | கேள்வி கோரல் பதிவேடு | அரச கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் 5.2.1 வழிகாட்டல் | பேணப்பட்டிருக்கவில்லை. |

**3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 இன் 01 ஆம் இலக்க திவிநெகும அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் சமுர்த்தி அதிகாரசபை, தக்ஷின அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் உடரட்ட அபிவிருத்தி அதிகாரசபை ஆகிய மூன்று நிறுவனங்களையும் ஒன்றிணைத்து 2014 சனவரி 03 ஆந் திகதிய 1843/4 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் 2014 சனவரி 03 ஆந் திகதி முதல் அமுலாகும் பொருட்டு திவிநெகும அபிவிருத்தி திணைக்களம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2013 ஆம் ஆண்டிற்குரிய அந்த மூன்று அதிகார சபைகளாலும் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பின்னர் எந்தவொரு நிதிக்கூற்றும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. திறைசேரி கணனி அச்சீட்டுக் குறிப்புக்களின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டிற்கான அந்த ஒவ்வொரு நிறுவனத்தினதும் செலவுகள் முறையே ரூபா 9,502 மில்லியன், ரூபா 134.03 மில்லியன் மற்றும் ரூபா 45.53 மில்லியனாக இருந்தன.

(ஆ) திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்தின் தொடக்கத்தில் ஒன்றிணைக்கப்பட்ட மூன்று அதிகாரசபைகளிடமும் காணப்பட்ட சொத்துக்கள் பொறுப்பேற்கப்பட்டமை தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) திவிநெகும அபிவிருத்தி திணைக்களம் தாபிக்கப்படும் போது சமுர்த்தி அதிகாரசபை, தக்ஷின அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் உடரட்ட அபிவிருத்தி அதிகாரசபை ஆகிய நிறுவனங்களில் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட சொத்துக்கள் முறையே ரூா 24,232.37 மில்லியன், ரூபா 283.83 மில்லியன் மற்றும் ரூபா 65.89 மில்லியன் என ரூபா 24,582.09 மில்லியன் கூட்டுத்தொகையாக இருந்தது. 2014 சனவரி 01 இல் உள்ளவாறு புதிய திணைக்களத்திற்கு இச்சொத்துக்களை கையளித்தமை தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு அறிக்கையிடப்படாதிருந்தமையால் அச்சொத்துக்கள் பொறுப்பு வாய்ந்த நபர்களால் முறையாக பொறுப்பேற்கப்பட்டு பதிவேடுகளில் உட்படுத்தப்படுத்தப்பட்டிருந்ததை உறுதிப்படுத்து வதற்கு முடியாதிருந்தது.

(ii) மேற்குறித்த நிறுவனங்களின் நிலையான சொத்துக்கள் தொடர்பாக 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்றும் 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/2 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் கணனிகள், உப பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடொன்றும் பேணப்பட்டிருக்கவில்லை.

(இ) திவிநெகும தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் VI ஆம் கட்டத்தின் கீழ் குருணாகல் மாவட்டத்தில் தென்னங்கன்றுகளை பகிர்ந்தளிக்கும் நிகழ்ச்சித்திட்டத்திற்குரிய தென்னை அபிவிருத்தி அதிகாரசபையின் தகவல்களின் பிரகாரம் ரூபா 23.5 மில்லியன் பெறுமதியான 235,057 தென்னங்கன்றுகள் 14 பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. அந்த அலுவலகங்களினால் ரூபா 14.17 மில்லியன் பெறுமதியான 141,671 தென்னங்கன்றுகள் நலனாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டதாக அவ்வலுவலகங்களின் செயன்முன்னேற்ற அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் ரூபா 9.33 மில்லியன் பெறுமதியான 93,386 தென்னங்கன்றுகள் பகிர்ந்தளிக்கப்பட்டமை தொடர்பில் எவ்வித தகவல்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஈ) 2014 செப்தெம்பர் 20 ஆந் திகதி நடைபெற்ற ஊவா மாகாண சபை தேர்தல்கள் நடைபெற இருந்த காலப்பகுதியில் மொனராகலை மாவட்டத்தில் வரட்சியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு அனுமதி வழங்கியதாக குறிப்பிடப்பட்ட 2014 செப்தெம்பர் 12 ஆந் திகதிய உயர் நீதிமன்றத்தின் கட்டளையினது பிரதியொன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(உ) மாத்தறை மாவட்டத்தின் பாராளுமன்ற உறுப்பினரொருவரின் பன்முகப்படுத்தப்பட்ட நிதிஏற்பாட்டின் கீழ் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கிடையே பகிர்ந்தளிப்பதற்காக 80 பக்க அப்பியாசப் புத்தகங்கள் 102,083 ஐ கொள்வனவு செய்வதற்காக ரூபா 2.45 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. கணக்காய்வு திகதியான 2015 ஏப்ரல் 30 ஆந் திகதியளவிலும் குறித்த புத்தகங்கள் பகிர்ந்தளிக்கபட்டமை தொடர்பாக எவ்வித தகவல்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஊ) கொழும்பு பிரதேச செயலகப் பிரிவில் நடாத்தப்படும் அறநெறிப் பாடசாலைகளுக்காக ரூபா 499,428 பெறுமதியான 10 அலுமாரிகளும் 487 பிளாஸ்ரிக் நாற்காலிகளும் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், அப்பொருட்கள் அறநெறிப் பாடசாலைகளுக்கு முறைப்படி பகிர்ந்தளிக்கப்பட்டமைக்கான அல்லது அப்பொருட்களை பொறுப்பேற்கப்பட்டதை உறுதிப்படுத்தக்கூடியதான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(எ) கொழும்பு பிரதேச செயலகப் பிரிவில் குறைந்த வருமானத்தை பெறுபவர்கள் மற்றும் சுயதொழில் புரிபவர்களுக்காக ஒன்று ரூபா 20,550 வீதம் 107 தையல் இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. குறித்த தையல் இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்குரிய கொள்வனவுத் தீர்மானங்கள், இயந்திரங்கள் வழங்கப்பட்ட நலனாலிகள் தொடர்பான விபரங்கள் மற்றும் நலனாளிகளினால் பொறுப்பேற்றமைக்காக எவ்வித தகவல்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

**3.3 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளித்தல்**

மீளாய்வாண்டின் போது அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்ட 13 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு 2015 ஆகஸ்ட் 31 ஆம் திகதியளவிலும் பதிலளிக்கப்பட்டிராததுடன் அந்த ஐயவினாக்களுக்கு உரித்தான கணிப்பிடப்படக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 2,735.41 மில்லியனாக காணப்பட்டது.

**3.4 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**3.4. பாதீட்டு முரண்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மூன்று செலவின விடயங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 68,000,000 தொகையான மொத்த தேறிய நிதி ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2013 இன் 36 ஆம் இலக்க ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தின் 5(2)ஆம் பிரிவிற்கு முரணாக நிகழ்ச்சித்திட்ட இலக்கம் 01 இன் கீழான ரூபா

29,374,065 தொகையான மூலதன நிதிஏற்பாட்டின் சேமிப்புக்கள் நிகழ்ச்சித்திட்டம் 2 இன் மூலதனச் செலவின நிதி ஏற்பாட்டிற்கு மாற்றப்பட்டிருந்தது.

(இ) நிதிப் பிரமாணம் 65(4)(V)(அ) மற்றும் (ஆ) இற்கு முரணாக வெளிநாட்டு நிதியளித்தலின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதிஏற்பாட்டில் சேமிக்கப்பட்டிருந்த ரூபா 2,620.47 மில்லியனான நிதிஏற்பாடு உள்நாட்டு நிதியளித்தலின் கீழ் செயற்படுத்தப்படுத்தப்பட்ட கமநெகும நிகழ்ச்சித்திட்ட நிதி ஏற்பாட்டிற்கு மாற்றப்பட்டிருந்தது.

(ஈ) திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்தினால் கையேற்கப்பட்டிருந்த ரூபா 9,415 மில்லியன் பெறுமதியான மூலதனச் சொத்துக்கள் மீண்டெழும் செலவினங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

### 3.4.2 ஏனைய அமைச்சுக்களுக்கும் மாவட்ட செயலகங்களுக்கும் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு

---

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெற்றுக்கொள்ளக்கூடிய தகவல்களின் பிரகாரம் வெவ்வேறு அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக அமைச்சினால் ரூபா 23,507.61 மில்லியன் நிதிஏற்பாடு 09 மாவட்ட / பிரதேச செயலகங்களுக்கும் 02 அமைச்சுக்களுக்கும் வழங்கப்பட்டிருந்ததுடன், அந்நிதி ஏற்பாட்டிலிருந்து ரூபா 15,886.93 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 7,620.68 மில்லியன், அதாவது, வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் 32.4 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் மாவட்ட செயலகங்களுக்கு வழங்கப்படும் நிதி ஏற்பாட்டிலிருந்து 2014 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் 06 பிரதேச செயலகங்களினால் ரூபா 150.15 மில்லியன் பெறுமதியான 7,209 காசோலைகள் வரையப்பட்டிருந்த போதிலும், அக்காசோலைகள் பெறுனர்களுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

(இ) குருணாகல் மாவட்டத்தின் 10 பிரதேச செயலகங்களுக்குரிய பொருட்கள் மற்றும் உபகரணங்களது கொள்வனவு தொடர்பாக ஒவ்வொரு நிறுவனத்திற்கும் வழங்கப்பட்ட ரூபா 3.59 மில்லியன் கூட்டுத்தொகையுடைய 15 காசோலைகள் 2015 மார்ச் 31 ஆந் திகதியளவிலும் தேறாதிருந்தன

(ஈ) குருணாகல் மாவட்டத்தின் மஹவ பிரதேச செயலகத்தினால் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவிற்காக ரூபா 62,409 பெறுமதியான மூன்று காசோலைகள் வரையப்பட்ட போதிலும், பொருட்கள் பெறப்படாமையால் 2015 மார்ச் 31 ஆந் திகதியளவிலும் அக்காசோலைகள் வழங்கப்படாமலிருந்தன.

(உ) கண்டி மாவட்டத்தின் மூன்று பிரதேச செயலகங்களால் நிதிப் பிரமாணம் 237(ஆ) இற்கு முரணாக ரூபா 1,479,949 பெறுமதியான 09 காசோலைகள் 2015 பெப்ரவரி மாத இறுதியளவிலும் இருந்தன.

(ஊ) திஸ்ஸமஹாராம பிரதேச செயலகத்தினால் வணிக ரீதியிலான கோழிப் பண்ணைகளை ஆரம்பிப்பதற்காக 43,579 கோழிக் குஞ்சுகள் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அக்கோழிக் குஞ்சுகளுக்காக கொள்வனவு செய்யப்பட வேண்டிய தரமான வளர்ச்சிக்கான உணவின் அளவு 141,937 கிலோ கிராம் எனினும், அதற்குக் கூடுதலாக 21,484 கிலோ கிராம் உணவு கொள்வனவு செய்யப்பட்டமையால் 2015

ஒக்தோபர் 16 ஆந் திகதியளவிலும் ரூபா 1,697,236 கூட்டுத்தொகை கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(எ) மஹரகம பிரதேச செயலகத்தினால் அபிவிருத்திச் செயற்திட்டக் கொடுப்பனவிற்காக 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையப்பட்ட ரூபா 7.97 மில்லியன் பெறுமதியான 36 காசோலைகள் 2015 மார்ச் 31 ஆந் திகதியளவிலும் உரிய நபர்களுக்கு வழங்கப்படாமல் இருந்தன.

(ஏ) பதுளை மாவட்டத்தின் 13 பிரதேச செயலகங்களால் வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துவதற்காக 647 நலனாளிகளுக்கென 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையப்பட்ட ரூபா 7.15 மில்லியன் பெறுமதியான 647 காசோலைகள் 2015 யூலை 06 ஆந் திகதியளவிலும் நலனாளிகளுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) அநுராதபுர மாவட்டத்தின் 16 பிரதேச செயலகங்களால் வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துவதற்காக 6499 நலனாளிகளுக்கென அவர்களது பெயருக்கு வரையப்பட்ட ரூபா 129,904,974 பெறுமதியான 6499 காசோலைகள் முறைப்படி நலனாளிகள் இனங்காணப்படாமை, எதிர்பார்த்த பொருட்கள் பெற்றுக்கொள்ளப்படாமை, நலனாளிகள் பங்களிப்பினை வழங்காமை போன்ற காரணங்களினால் 2015 ஒக்தோபர் 22 ஆந் திகதியளவிலும் நலனாளிகளுக்கு வழங்கப்படாமல் பிரதேச செயலாளரின் பொறுப்பில் இருந்தது.

### 3.5 கட்டுநிதிக் கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திறைசேரி செயற்பாட்டு திணைக்களத்தினால் 2014 திசெம்பர் மாதத்தின் போது ரூபா 1,309.65 மில்லியன் கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அமைச்சின் தேவைப்பாட்டை மிகைத்து திறைசேரியிடமிருந்து கட்டுநிதி பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தமையால் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டுநிதிக் கணக்கில் ரூபா 515,462,199 மீதி காணப்பட்டது.

(ஆ) அமைச்சின் கீழ் செயற்படும் கிராமிய பாலங்கள் மற்றும் யுத்தத்தினால் பாதிப்பிற்குள்ளான பிரதேசங்களில் அவசர அபிவிருத்தி செயற்திட்டங்களிற்காக 2014 ஆம் ஆண்டிற்கென திறைசேரி செயற்பாட்டு திணைக்களத்தின் அரச கடன் முகாமைத்துவ பிரிவினால் முறையே ரூபா 14,622,086 ரூபா 24,334,805 என்பன செலவிடப்பட்டிருந்தன. 2014 ஆம் ஆண்டில் அமைச்சின் செலினத் தலைப்பில் நிதிச் சேமிப்பு இல்லாமையால் 2014 ஆம் ஆண்டின் போது அச்செலவினம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், ஒதுக்கீட்டுக் கணக்கின் டீ.ஜீ.எஸ்.ஏ. 6(i) மாதிரிப் படிவத்தில் மூலதனச் செலவினத்தின் மொத்த தேறிய ஏற்பாடு மற்றும் உள்ளவாறான செலவினம் என்பவற்றிற்கிடையேயான வித்தியாசத்திற்குக் காரணம் தெளிவுபடுத்தலின் கீழ் கிராமிய பாலங்கள் செயற்திட்டத்தில் ரூபா 4,698,885 ஆன சேமிப்புக்கு மதிப்பீட்டு நிதி ஏற்பாடாக குறிப்பிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது கிராமிய பாலங்கள் செயற்திட்டத்தின் நிதி ஏற்பாட்டிலிருந்து ரூபா 119,947,000 தொகையும் யுத்தத்தினால் சேதத்திற்குட்பட்ட பிரதேசங்களில் அவசர அபிவிருத்தி செயற்திட்ட நிதி ஏற்பாட்டிலிருந்து ரூபா 380,046,930 தொகையும் வயர்மன்ட் வகைமாற்று நடைமுறையினைப் பயன்படுத்தி வேறு செலவினத் தலைப்புகளுக்கு நிதி ஏற்பாடு மாற்றப்பட்டிருந்தன.

(இ) நிதிப் பிரமாணம் 371 இன் பிரகாரம் பணி நிறைவேற்றப்பட்ட உடன் பெற்றுக்கொள்ளப்பட்ட செயல் நிமித்த உப கட்டுநிதி தீர்க்கப்பட வேண்டிய போதிலும், திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்தினால் 69 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா 5,419,262 முற்பணங்கள் 7 நாட்கள் முதல் 52 நாட்கள் வரையான காலதாமதத்தின் பின்னர் தீர்த்து வைக்கப்பட்டிருந்தன.

(ஈ) நிதிப் பிரமாணம் 371 இற்கு முரணாக திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்தினால் 11 சந்தர்ப்பங்களின் போது 08 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 20,000 இற்கு மேற்பட்ட ரூபா 10,421,402 கூட்டுத்தொகையான செயல் நிமித்த உப கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது.

### 3.6 பொது வைப்புக் கணக்கு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இரண்டு ஆண்டுகள் கடந்த ரூபா 16,409,817 தொகையான 51 வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்தின் 2014 திசெம்பர் 31 ஆம் திகதி இருந்த ரூபா 180,592,977 தொகையான பொது வைப்பு மீதிகள் தொடர்பாக அமைச்சிற்கு அறிக்கையிடப்படாதிருந்தமையால் அப் பொது வைப்பு மீதிகள் தொடர்பாக கணக்கு மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) வழங்கப்பட்டு, கொடுப்பனவிற்காக வங்கிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிராத 302,880 பெறுமதியான 14 காசோலைகள் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக நிதிப்பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.7 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று

10501 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்று தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 4,730,988 ஆக இருந்ததுடன் அம்மீதிகள் 01 ஆண்டு முதல் 15 ஆண்டுகள் வரையான காலப்பகுதியிலிருந்து இருந்து வந்த போதிலும், அந் நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

(ஆ) அமைச்சினால் கடன் வழங்கும் போது பின்பற்றப்பட வேண்டிய ஏற்பாடுகள் பின்பற்றப்படாமல் ரூபா 4,518,140 தொகையான கடன் வழங்கப்பட்டிருந்தது.

(இ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சிற்கு வெளியே இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மீதி ரூபா 1,540,706 தொகையாக இணக்கக்கூற்றில் குறிப்பிடப்பட்டிருந்ததுடன், அக்கடன்பட்டோர் மீதியில் ரூபா 915,551 தொகை ஏறக்குறைய 15 வருட காலமாக இருந்து வருவதாக காணப்பட்டது.

(ஈ) அமைச்சினால் 2014 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு தவறான வரவு வைப்பாக ரூபா 21,000 தொகையும், தவறான செலவு வைப்பாக ரூபா 323,683 தொகையும் கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன், அப்பெறுமதி தீர்க்கப்பட்டிருக்கவில்லை. இந்த தவறான செலவு வைத்தல்களில் ரூபா 135,449, அதாவது, 42 சதவீதம் 2014 ஆம் ஆண்டிற்கு முன்னர் இருந்து வரும் மீதிகளாக இருந்தன.

(உ) 2007 ஆம் ஆண்டில் அமைச்சரவை பத்திர திருத்தத்தின் பிரகாரம் கையேற்கப்பட்ட கடன் மீதிகளுக்கிடையே 37 உத்தியோகத்தர்களுக்குரிய ரூபா 1,198,829 கூட்டுத்தொகையான ரூபா 10,000 இற்கு மேற்பட்ட கடன் மீதிகள் நிதிப்பிரமாணம் 109 இன் பிரகாரம் பதிவழிக்கப்படுவதற்கு அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்திடம் அங்கீகாரம் கோரப்பட்டிருந்தது. எனினும், தகவல்களை தேட முடியாதென்ற அடிப்படையில் மாத்திரம் இக்கடன் மீதிகளை பதிவழிப்பதற்கு நியாயப்படுத்த முடியாதிருந்ததுடன், அவ்வாறான அங்கீரத்தை வழங்க முடியாதென அரச நிதிப் பணிப்பாளர் நாயகம் அறிவித்திருந்தார்.

(ஊ) 2001 ஆம் ஆண்டின் போது வெளிநாட்டு விடுமுறை பெற்று மீண்டும் சேவைக்கு அறிக்கையிடாத இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,076,581 தொகையான இடர் கடன் மற்றும் ஆதனக் கடன் மீதி இணக்கக் கூற்றில் குறிப்பிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஒரு உத்தியோகத்தரிடமிருந்து அறவிடுவதற்கிருந்த ரூா 542,280 தொகையான ஆதனக் கடன்தொகையிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஆதனங்களுக்குரிய உரித்துரிதியை அரசின் பெயரில் கையேற்பதற்கு தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 11.9 ஆம் பிரிவின் பிரகாரம் கடனை அங்கீகரித்த அதிகாரி தவறியிருந்தார். 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அந்தக் காணிக்கான அற்றோனி அதிகாரத்தை பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே ரூபா 64,274 தொகையான இடர்கடன் மீதியையும் அக்கடனுக்குரிய வட்டியான ரூபா 35,769 தொகையையும் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் அறவிடுவதற்கு முடியாதிருந்தது.

(ii) இந்த உத்தியோகத்தர் வெளிநாடு சென்று பதவி வரிதாகியமை காரணமாக மேலே குறிப்பிடப்பட்ட கடன் தொகைக்கு மேலதிகமாக 2001 செப்தம்பரிலிருந்து 2002 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை செலுத்தியிருந்த மொத்த சம்பளம், கட்டாய சேவைக்காலத்தில் சேவை புரியாமையால் செலுத்த வேண்டிய தண்டக் கட்டணம் மற்றும் வெளிநாட்டுப் பயிற்சிக்காக அரசின் மூலம் செலவிடப்பட்ட செலவினமாக மொத்தமாக ரூபா 2,432,838 அறவிடப்பட வேண்டியிருந்தது.

(iii) மற்றைய உத்தியோகத்தரின் ஆதனக் கடன் கோவை காணாமல் போயிருந்தமையால் ரூபா 345,794 தொகையான ஆதனக் கடனை அறவிடு முடியாமல் இருந்தது. உத்தியோகத்தரால் கடன் தொகை கொடுப்பனவு செய்யப்படாமையால் இக்கடன் மீதியை அங்கீகரித்து விடுவித்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென தாபனப் பணிப்பாளர் நாயகத்தினால் ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்த அறிவுறுத்தல்களின் பிரகாரம் அக்காலப்பகுதியிலேயே நடவடிக்கை

எடுக்காமல் இந்த உத்தியோகத்தரின் பெயர் கருப்பு பதிவேட்டிற்கு உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அவ்வாறே ரூபா 124,233 தொகையான இடர் கடன்மீதியும் அதற்குரிய வட்டித் தொகையும் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் அறவிடப்பட முடியாதிருந்தது.

**3.8 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**3.8.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்**

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.8.1 வருடாந்த கொள்வனவுத் திட்டம்**

2006 மார்ச் 24 ஆம் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2014 திசெம்பர் 31 ஆம் திகதியளவிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.9 சொத்துக்களின் முகாமைத்துவம்**

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது கண்டறியப்பட்ட குறைபாடுகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

**(அ) விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்**

கீழே வகைப்படுத்தப்பட்டவாறு சில சொத்துக்கள் விளைவற்று அல்லது குறைவான பயன்பாட்டுடன் இருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டன.

(i) அமைச்சின் நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தி உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சினால் ரூபா 44,347,822 பெறுமதியான 40,056 கல்வனைஸ் குழாய்களை 77 உள்ளூராட்சி மன்றங்களுக்கு பகிர்ந்தளித்திருந்ததுடன், அந்த உள்ளூராட்சி மன்றங்களினால் வழங்கப்பட்டிருந்த ஆவணச் சான்றுகளின் பிரகாரம் அந்நிறுவனங்களினால் அவ்வாறான விண்ணப்பம் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், குறித்த குழாய்கள் அந்நிறுவனங்களில் விளைவற்றவாறு குவித்து வைக்கப்பட்டிருந்தன.

(ii) குருணாகல் மாவட்டத்தின் வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்து பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த ரூபா 27,930,032 பெறுமதியான 1,151 உபகரணங்கள் பகிர்ந்தளிக்கப்படாமல் 14 பிரதேச செயலகங்களில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன.

(iii) மாத்தறை இஸ்ஸதீன் நகரின் விளையாட்டு சங்கத்திற்கு பரபோலிக் வகையிலான நடமாடும் விழா மண்டபமொன்றும் நடமாடும் மேடையொன்றும் வழங்கப்படுவதற்காக விழாப் பொருட்கள் விற்பனை செய்யும் நிறுவனமொன்றுக்கு 2014 திசெம்பர் 16 ஆந் திகதி ரூபா 1,658,000 செலுத்தப்பட்டிருந்தது. 2015 ஒக்தோபர் 19 ஆந் திகதி

மேற்கொண்ட நேரடிப் பரிசோதனையின் போது குறித்த பொருட்கள் விளையாட்டுச் சங்கத்திற்கு கிடைத்திருக்கவில்லை.

(iv) மொனறாகலை மாவட்ட திட்டமிடல் செயலகத்திற்குரிய 09 பிரதேச செயலகங்களினால் 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் அமைச்சின் நிதி ஏற்பாடுகளிலிருந்து பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் பகிர்ந்தளிப்பதற்குக் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 37,712,454 பெறுமதியான 113,278 பொருட்கள் மற்றும் உபகரண அலகுகள் நலனாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படாமல் மீளாய்வாண்டின் இறுதி வரை பிரதேச செயலகங்களில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன.

(v) வெவ்வேறு நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் 2014 ஆம் ஆண்டின் போது மஹரகம பிரதேச செயலகத்தினால் ரூபா 26,641,041 பெறுமதியான பொருட்கள் உரிய ஆட்களுக்கோ அல்லது நிறுவனங்களிற்கோ பதிர்ந்தளிக்கப்படாமல் 2015 மார்ச் 31 ஆந் திகதியளவிலும் களஞ்சியத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தன.

(vi) நுவரெலியா பிரதேச செயலகத்தினால் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஏற்பாடு மற்றும் மக்கள் பிரதிநிதிகளின் விசேட செயற்திட்டங்களின் கீழ் கொள்வவு செய்யப்பட்டிருந்த ரூபா 938,478 பெறுமதியான 04 பொருள் உருப்படிகள் 2015 ஒக்தோபர் 20 ஆந் திகதியளவிலும் குறித்த நலனாளிகளுக்கிடையே பகிரப்படாதிருந்தன.

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை மேற்கொள்ளுதல்**

2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 02/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2014 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அவ்வறிக்கை 2015 மார்ச் 17 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அமைச்சினால் 2015 மே 31 ஆந் திகதி வரையிலும் அவ்வறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இறுதியாக வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2013 ஆம் ஆண்டிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**(இ) கையேற்கப்பட்டிராத சொத்துக்கள் முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்படுதல்**

அமைச்சினால் முறையாக சொத்துக்களைப் பொறுப்பேற்காமல் அச்சொத்துக்களில் மேற்கொள்ளப்பட்டிருந்த நிர்மாணிப்புக்கள் / திருத்தங்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மாத்தறை மாவட்டத்தின் முலட்டியன பிரதேச செயலகத்தினால் ரூபா 6,232,089 செலவிடப்பட்டு தனியார் காணிகளில் 04 பலநோக்குக் கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன், குறித்த காணிகள் அரசிற்கு கையளிக்கப்படவுமில்லை.

(ii) தம்புள்ள பிரதேச செயலகத்தின் கலோகஹஎல வாரச்சந்தையை அபிவிருத்தி செய்வதற்கு ரூபா 1,000,000 நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் 2014 ஒக்தோபர் 21 ஆம் திகதியளவில் நிறைவேற்றப்பட்டிருந்த போதிலும், இக் காணி பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்டிராததுடன், தற்போது வாரச்சந்தைக்கென அது பயன்படுத்தப்படாதுமிருந்தது.

(iii) தம்புள்ள பிரதேச செயலகத்தின் வெலன்கொல்ல விளையாட்டரங்கு ரூபா 1,550,000 செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், அக் காணியினது உரித்தை சபை கையேற்றிராததுடன், விளையாட்டரங்கு பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) கண்டி மாவட்டத்தின் பன்வில பிரதேச செயலகத்தின் 2014 கமநெகும அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 929,839 செலவில் நிர்மாணிக்கப்பட்ட பன்வில உடகும்புர கிராமிய சனசமூக நிலையத்திற்குப் பயன்படுத்தப்பட்ட காணி சட்ட ரீதியாக கையேற்கப்பட்டிருக்கவில்லை.

(v) கண்டி மாவட்டத்தின் பன்வில பிரதேச செயலகத்தில் ரூபா 2,000,000 மதிப்பிடப்பட்ட கிரயத்துடன் நிர்மாணிக்கப்பட்ட மடுல்கெலே விளையாட்டரங்கிற்காக பயன்படுத்தப்பட்ட மாஉஸ்ஸாவ தோட்டத்தின் 1 ½ ஏக்கரிலான காணியை அரச வளங்கள் மற்றும் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சின் கீழான இலங்கை பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்திற்கு உரித்தானபோதும் அதனைக் கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) தீர்க்கப்படாத பொறுப்புகள்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சின் தீர்க்கப்படாத ஒரு வருடத்திற்கும் குறைவான பொறுப்புக்கள் ரூபா 7,623,729,432 ஆக இருந்ததுடன், அது தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| விபரம் | பொறுப்புக்கள் |
|---|---|
| | ரூபா |
| ஒதுக்கீட்டுக் கணக்கின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்ட பொறுப்புக்கள் | 6,283,207,693 |
| ஒதுக்கீட்டுக் கணக்கின் பிரகாரம் வெளிப்படுத்தப்படாத – அமைச்சு | 2,209,393 |
| ஒதுக்கீட்டுக் கணக்கின் பிரகாரம் வெளிப்படுத்தப்படாத – உலக உணவு நிகழ்ச்சித்திட்டம் | 289,115 |
| திவிநெகும அபிவிருத்தி திணைக்களம் | 1,338,023,231 |
| மொத்தம் | 7,623,729,432 |

## 3.10 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களின் ஏற்பாடுகளிற்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே விபரிக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | | |
| | XIV அத்தியாயத்தின் 4.1, 4.4.3, 4.5 மற்றும் 4.6 ஆம் பிரிவுகள் | 34,500 | மொனறாகலை மாவட்டத்தின் நிவாரண உதவிகள் பகிர்ந்தளித்தல் பணியில் ஈடுபட்டிருந்த அரசின் 10 உத்தியோகத்தர்களுக்கு (இன்னும் 07 உத்தியோகத்தர்களுக்கு கொடுப்பனவு தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வில்லை) செலுத்த வேண்டிய இணைந்த படிகளுக்குப் பதிலாக அமைச்சினது செயலாளரின் கட்டளையின் பிரகாரம் நாளொன்றுக்கு ரூபா 1,500 வீதம் படி செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | |
| | (i) நிதிப் பிரமாணம் 104(4) | 7,729,023 | பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சரினால் பயன்படுத்தப்பட்ட ஜீப் வண்டி திடீர் விபத்திற்குள்ளானமை தொடர்பாக முழுமை அறிக்கை 2014 திசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) நிதிப் பிரமாணம் 137 | 48.565,000 | திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்தினால் 5 சந்தர்ப்பங்களில் ரூபா 48.57 மில்லியனுக்குரிய கொள்வனவு நடவடிக்கைகளின் போது உரிய பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (iii) நிதிப் பிரமாணம் 138(4) | 1,078,385 | அமைச்சின் வாகனப் பதிவேட்டில் உள்ளடக்கப்படாத 23 வாகனங்களை காப்புறுதி செய்வதற்காக ரூபா 1,078,385 செலவிடப்பட்டிருந்தது. |
| | (iv) நிதிப் பிரமாணம் 632 மற்றும் 633 | 54,120,000 | அரச திணைக்களங்களில் அச்சீட்டு வேலைகளை அரசாங்க அச்சகத்தின் மூலம் அல்லது அரச அச்சகரிடம் விசாரித்து உரிய அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்தின் படி தனியார் அச்சகங்கள் மூலம் அச்சிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், |

| | | | |
|---|---|---|---|
| | | | திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்தினால் 6 சந்தப்பங்களின் போது குறித்த பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (v) | நிதிப் பிரமாணம் 715(2)(3) | 894,600 | 2014 தேசத்திற்கு மகுடம் செயன் முன்னேற்றம் தொடர்பாக அறிக்கையிடுவதற்கு 150 புத்தகங்களை அச்சிடும் போது குறித்த நடைமுறைகள் பின்பற்றப்பட்டிருக்க வில்லை. |
| **(இ)** | **சனாதிபதி செயலகத்தின் சுற்றறிக்கை** | | |
| (i) | 2006 பெப்ரவரி 21 ஆம் திகதிய சீஎஸ்/ஏ/2/3/4இலக்க சுற்றறிக்கையின் 4.2 ஆம் பந்தி | - | 2014 யூன் 07 ஆந் திகதி முதல் 11 ஆந் திகதி வரை அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற நீர்வாழ் சம்மேளனத்திற்கு சமூகமளித்த பிரதி அமைச்சர் தமது அறிக்கையை 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் சமர்ப்பித்திருக்கவில்லை. |
| (ii) | 5.1 ஆம் பந்தி | - | அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற செயலமர்விற்கு சமூகமளித்த பிரதி அமைச்சர் வெளிநாட்டுப் பிரயாணத்திற்காக பெற்றுக்கொண்ட படி செலவிடப்பட்டமை தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கவில்லை. |
| (iii) | 2010 மே 14 ஆம் திகதிய சீஏ/1/17/1 ஆம் இலக்க சனாதிபதியின் செயலாளரது சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | | (i) பிரதி அமைச்சரால் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக 04 வாகனங்கள் பயன்படுத்தப் பட்டிருந்தன. |
| | | 93,000 | (ii) பிரதி அமைச்சருக்கு டீசல் வாகனமொன்று வழங்கப்பட்டிருந்த போதிலும், பெற்றோல் வாகனத்திற்குரித்தாக எரிபாருள் படிகள் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. |
| (ஈ) | முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | | |
| (i) | 2007 ஏப்ரல் 05 ஆம் திகதிய 33 ஆம் இலக்க | 54,484 | தேசிய விவசாய வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் முகாமைத்துவ அலகு |

| | | | |
|---|---|---|---|
| | சுற்றறிக்கையின் - 5.1(6) ஆம் பந்தி | | உத்தியோகத்தர்களினால் 09 சந்தர்ப்பங்களின் போது வெளிக்கள பரிசோதனைக்காக இணைந்த படிகள் பெற்றுக்கொள்ளாமல் அதற்குப் பதிலாக உணவும் பானங்களுக்கும் தங்குமிட செலவினமும் செயற்திட்ட நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது. |
| | - II ஆம் பந்தி | 240,164 | வருகைப்படி செலுத்தப்பட்டிருந்த போதும், தேசிய விவசாய வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் தேசிய வழிகாட்டிக் குழு கூட்டத்திற்குச் சமூகமளித்த குழு அங்கத்தவர்களுக்கு உணவு மற்றும் பானங்களை வழங்குவதற்காக ரூபா 240,164 செலவிடப்பட்டிருந்தது. |
| (ii) | 3.1 (இ) ஆம் பந்தி | 3,132,075 | மூன்று செயற்திட்டங்களுக்குரித்தாக மாத்திரம் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது கடமை மேவுகை அடிப்படையில் கடமை புரியும் உத்தியோகத்தர்களால் ஒரு தடவை மாத்திரம் பெற்றுக்கொள்வதற்கு உரித்துடைய விசேட படிகளை இரண்டு சந்தர்ப்பங்களில் பெற்றுக் கொண்டிருந்ததுடன் 2011 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரை இவ்வாறு பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த படி ரூபா 3,132,075 ஆகும். |
| (உ) | 2014 நவம்பர் 22 ஆந் திகதிய பீஆர்ஈ/2015/43 ஆம் இலக்க தேர்தல்கள் ஆணையாளரின் சுற்றறிக்கையும் அதே இலக்கமுடைய 2014 திசெம்பர் 02 ஆந் திகதிய சுற்றறிக்கையும் | 3,086,000,000 | 8 சந்தர்ப்பங்களில் சனாதிபதி அபேட்சகரொருவரின் மேம்பாட்டிற்கு காரணமாக இருக்கக்கூடிய செயற்பாடுகளுக்காக பல்வேறு பொருட்கள் பகிர்ந்தளிக்கப்பட்டமை, நிவாரண உதவிகள் வழங்கல் போன்ற நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்தி இருந்தனர். |
| (ஊ) | 2014 நவம்பர் 07 ஆந் திகதிய எம்ஈடீ/ஆர்டீ/டீஈவீ/2014 ஆம் இலக்க அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கை | | உயர் வருமானம் பெறக்கூடிய குடும்பங்கள், நிரந்தர தொழிலில் ஈடுபடும் குடும்பங்கள் மற்றும் விவாகமாகாத நபர்களுக்கு வவுனியா மாவட்ட செயலகத்தினால் வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் உதவிகள் வழங்கப்பட்டிருந்தன. |

### 3.11 வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள்

மீளாய்வாண்டின் போது அமைச்சினால் வெளிநாட்டு நிதியளிப்புக்களின் கீழ் 21 செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருந்தன. வருடாந்த மதிப்பீடு, நிதிப் பிரமாணங்கள் 66 மாறுதல்கள், கடன் மற்றும் செயற்திட்ட உடன்படிக்கையின் பிரகாரம் ஆண்டின் மொத்த நிதிஏற்பாடு ரூபா 15,837,780,288 ஆக இருந்ததுடன், அச்செயற்திட்டங்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 15,710,300,321 பயன்படுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### (அ) கணக்காய்விற்கு உட்படாத வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள்

கடன் உடன்படிக்கையின் பிரகாரம் சமூக அபிவிருத்தி மற்றும் வாழ்வாதார வழிகளை மேம்படுத்துதல் செயற்திட்டம் (இரண்டாவது) கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு புறம்பாக வேறு கணக்காய்வுக் கம்பனியொன்றினால் கணக்காய்வு செய்யப்பட்டிருந்தது.

#### (ஆ) நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

அமைச்சினால் 2015 மார்ச் 31 ஆம் திகதியளவில் மோதல்களினால் சேதத்திற்குட்பட்ட பிரதேசங்களின் அவசர அபிவிருத்தி செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அந்நிதிக்கூற்றுக்கள் 2015 ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.12 உள்நாட்டு நிதியளிப்புக்களின் கீழ் செயற்திட்டங்கள் அமுல்ப்படுத்தல்

செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்படாது கைவிடப்படுதல், செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படாது கைவிடப்படுதல் மற்றும் செயற்திட்ட தாமதங்கள் தொடர்பான கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது கண்டறியப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

#### (அ) செயற்திட்டம் ஆரம்பிக்கப்படாது கைவிடப்படுதல்

அமைச்சினால் பின்வரும் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| செயற்திட்டம் | மதிப்பீட்டுக் கிரயம் | ஆரம்பிக்க வேண்டிய திகதி | ஆரம்பிக்கப்படாமைக்கான காரணங்கள், சுருக்கமாக |
|---|---|---|---|
| | ரூபா | | |
| புத்தளம் பிரதேச செயலகப் பிரிவில் செயற்படுத்துவதற்கு அங்கீகரிக்கப்பட்ட 09 செயற்திட்டங்கள் | 3,000,000 | 2014 ஆம் ஆண்டு | அதிக மழை காரணமாக இச்செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்கு முன் மொழியப்பட்ட பிரதேசங்கள் வெள்ள தாக்கத்திற்கு முகங் கொடுத்தல் மற்றும் மூலப் பொருட்களை பெற்றுக் கொள்வதற்கு சிரமமாக இருந்தமை |
| அம்பாறை மாவட்டத்தின் உஹன பிரதேச செயலகப் பிரிவில் 2014 ஆம் ஆண்டின்போது அமுல்படுத்து வதற்கு உத்தேசிக்கப்பட்ட 05 செயற்திட்டங்கள் | 950,000 | 2014 ஆம் ஆண்டு | நிதி ஏற்பாடு போதியளவில் இல்லாமை, நலனாளிகளின் இணக்கப்பாடுஇல்லாமை, மதிப்பீடு தயாரிக்கப்படாமை இட மொன்றை தெரிவு செய்தலில் சிக்கல்கள். |

| | | | |
|---|---|---|---|
| மண்சரிவுக்கு உட்பட்டோருக்கு வழங்கப்பட்ட காணிகளுக்கு நீர் வசதிகளை வழங்குவதற்காக கமநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மாத்தளை மாவட்டத்தின் இரத்தோட்டை பிரதேச செயலகத்திற்கு வழங்கிய நிதி ஏற்பாடு | 2,000,000 | 2014.05.27 | காணிகளுக்கு வீதி வசதிகள் வழங்கியதன் பின்னர் நீர் வசதிளை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் வீதி வசதிகளை வழங்கும் செயற்திட்டம் முழுமையாக பூர்த்தி செய்யப்படவில்லை. |
| கமநெகும, பலாத் நெகும மற்றும் பிரதேச அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மாத்தளை மாவட்டத்தின் பள்ளேபொல பிரதேச செயலகத்தின் 06 செயற்திட்ட முன்மொழிவுகள் | 2,200,000 | 2014 ஆம் ஆண்டு | சீரற்ற காலநிலை மற்றும் தொழில்நுட்ப விடயங்கள் |
| கண்டி மாவட்டத்தின் கங்க இஹல பிரதேச செயலகத்தின் 91 நிர்மாணங்கள் | 18,575,000 | 2014 ஆம் ஆண்டு | நிதி ஏற்பாடு போதாமை, நிதி ஏற்பாடு தாமதமாக கிடைத்தமை, வீதி பழுதடைந்தமையால் போக்கு வரத்திற்கு சிரமமாக இருந்தமை, பள்ளமான இடங்களில் அமைந்திருத்தல், பொருட்களை கொண்டு செல்வதில் சிரமம், முன் மொழிவைச் செயற்படுத்து வதற்கு போதியளவு காலம் இல்லாமை, அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்த சங்கங்கள் முன்வராமை, மழை, பொருட்களைக் கொண்டு செல்வதில் சிரமங்கள், கொள்வனவின் போது ஏற்பட்ட சிரமங்கள் |
| கம்புறுப்பிட்டிய பிரதேச செயலகத்தில் 10 செயற்திட்டங்களை செயற்படுத்துதல் | 7,189,602 | 2014 ஆம் ஆண்டு | ஆரம்ப மதிப்பீடு தயாரிக்கப் பட்டிருக்கவில்லை |
| கண்டி மாவட்டத்தின் குண்டசாலை பிரதேச செயலகத்தின் 17 செயற்திட்டங்கள் | 4,700,000 | 2014 ஆம் ஆண்டு | நிதி ஏற்பாடு போதாமை, அங்கீகாரம் கிடைப்பதற்கு தாமதம், அரசியல்வாதிகளால் செயற்திட்ட முன்மொழிவு அவ்வப்போது திருத்தம் செய்யப்பட்டமை, குறுகிய காலத்தில் அதிகளவிலான செயற்திட்டங்களை மேற் கொள்ள நேர்ந்தமை மற்றும் அதிக மழை |
| கண்டி மாவட்டத்தின் குண்டசாலை பிரதேச செயலகத்தின் 33 செயற்திட்டங்களின் நிர்மாணங்கள் | 16,150,000 | 2014 ஆம் ஆண்டு | நிர்மாணப் பொருட்கள் பற்றாக்குறை, அரசியல்வாதிகளால் செயற்திட்ட முன்மொழிவு அவ்வப்போது திருத்தம் செய்யப்பட்டமை, |

| | | | |
|---|---|---|---|
| | | | மற்றும் உத்தியோகத்தர்களின் கடமைகள் அதிகரித்தமை |
| கண்டி மாவட்டத்தின் உடுநுவர பிரதேச செயலகத்தின் 13 அபிவிருத்தி செயற்திட்டங்கள் | 9,050,000 | 2014 ஆம் ஆண்டு | 2014 திசெம்பர் 31 இல் வேலை ஆரம்பிப்பதற்கு அல்லது ஆரம்ப வேலை களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் கைவிடப்பட்டிருந்தது. |
| நுவரெலியா பிரதேச செயலகத்தின் 04 நிர்மாணக் கைத்தொழில் கள் | 4,455,000 | 2014 ஆம் ஆண்டு | போதியளவில் நிதி வசதிகள் இல்லாத சங்கங்களுக்கு ஒப்பந்தம் வழங்கபட்டமை. |
| நுவரெலியா மாவட்டத்தின் ரிகில்லகஸ்கட மூலிகை தோட்டத்தின் வடிகாண் முறை மற்றும் படிக்கற்களை தயாரித்தல் | 1,980,000 | 2014 ஆம் ஆண்டு | நிர்மாணத்தை பூர்த்தி செய்வதற்கு 20 நாட்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வு திகதியான 2015 ஏப்ரல் 02 ஆந் திகதி வரை வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| 2014 ஆம் ஆண்டில் நுவரெலியா மாவட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட 206 செயற்திட்டங்கள் | 54,996,000 | 2014 ஆம் ஆண்டு | வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்க வில்லை. |

**(ஆ) செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படாது கைவிடப்படுதல்**

அமைச்சினால் பின்வரும் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதும் அச்செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்பட்டிருந்தன.

| செயற்திட்டம் | மதிப்பீட்டுக் கிரயம் | ஆரம்பிக்கப் பட்ட திகதி | 2014 திசெம்பர் 31 ஆந் திகதி யளவில் செலவினம் | கைவிடுவதற்கான காரணங்கள் |
|---|---|---|---|---|
| | ரூபா | | ரூபா | |
| களுத்துறை மாவட்டத்தின் மதுராவெல பிரதேச செயலகப் பிரிவின் கெசல்ஹேனாவ பொது விளையாட்டரங்கை அமைத்தலும் பக்கச் சுவர் கட்டுதலும் | 3,750,000 | 2014 ஆம் ஆண்டு | 2,017,979 | - |
| ஹங்குரன்கெத்த பிரதேச செயலக பிரிவின் மெட்டிபேஓய பலநோக்குக் கட்டிட நிர்மாணம் | 990,000 | 2014 ஆம் ஆண்டு | 224,486 | - |
| ஹங்குரன்கெத்த பிரதேச செயலக பிரிவின் லபுஹேன்வெல பலநோக்குக் கட்டிட நிர்மாணம் | 990,000 | 2014 ஆம் ஆண்டு | 134,331 | - |

| | | | | |
|---|---|---|---|---|
| ஹங்குரன்கெத்த பிரதேச செயலக பிரிவின் கபரகல வீதி கொங்கிரீட் இடல் | 1,485,000 | 2014 ஆம் ஆண்டு | 825,557 | - |
| கொத்மலே பிரதேச செயலக பிரிவின் நுகவெல பலநோக்குக் கட்டிட நிர்மாணம் | 1,782,000 | 2014 ஆம் ஆண்டு | - | மதிப்பீடு செய்யப்பட்ட 34 உருப்படிகளில் 07 மாத்திரம் நிறைவேற்றப்பட்டு செயற்திட்டம் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தது |
| புத்தளம் மாவட்டத்தின் ஆனமடுவ பிரதேச செயலகத்தின் பம்மத்தேகம சரணங்கர சனசமூக மண்டப நிர்மாணம் | 834,000 | 2014 ஆம் ஆண்டு | 500,000 | - |
| கண்டி மாவட்டத்தின் பன்வில பிரதேச செயலகப் பிரிவின் அங்கம்மன 53 ஆம் இலக்க நீர் முன்மொழிவுத் திட்டம் | 1,500,000 | 2014.09.11 | - | ஒப்பந்தச் சங்கம் உடன்படிக்கையில் கையொப்பமிடுவதற்காக வருகை தராமை- |
| முலட்டியன பிரதேச செயலகப் பிரிவின் கொம்பத்தல பலநோக்குக் கட்டிடத்தின் கீழ் மாடி நிர்மாணம் | | 2014.09 | 1,500,000 | 2009 ஒக்தோபர் 06 ஆந் திகதி திறக்கப்பட்டு மூடப்பட்டிருந்ததுடன் மீண்டும் 2014 செப்தம்பர் மாதத்தின் போது மேல் மாடியின் வேலை மேற்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் கணக்காய்வு திகதியான 2015 மார்ச் 18 ஆந் திகதி வரை வேலை பூர்த்தி செய்யப்படாமல் மூடப்பட்டிருந்தது. |
| மாத்தறை மாவட்டத்தின் பஸ்கொடை பிரதேச செயலகப் பிரிவின் பெரலபனாதர வாரச்சந்தை புனரமைப்பும் வியாபாரத் தொகுதி நிர்மாணமும் | 20,475,369 | 2014.10.07 | | உடன்படிக்கையின் பிரகாரம் 2015 யூன் 02 ஆந் திகதி அளவில் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும், அத்திவார மட்டம் வரை வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்தது |
| வனசீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மாத்தளை மாவட்டத்தின் நாவுல பிரதேச செயலகப் பிரிவின் புப்பிலிய மற்றும் ஹெலஒகஹவத்த குளத்தை அமைத்தல் | 10,780,000 | 2014.07.15 | | மதிப்பீடு தயாரிப்பதில் தாமதம். 2014 திசெம்பர் அளவிலும் செயற்திட்டம் ஆரம்ப சந்தர்ப்பத்தில் காணப்பட்டது. |
| தம்புள்ள பிரதேச செயலகத்தினால் 09 பிரிவுகளை மேவுகை செய்யும் வகையில் யானை வேலிகளை புனர் நிர்மாணம் செய்தலும் கல்தொட்டை வனசீவராசிகள் அலுவலகத்திற்கு | 27,500,000 | 2014 ஆம் ஆண்டு | 18,167,743 | - |

| | | | | |
|---|---|---|---|---|
| விடுதியொன்றை நிர்மாணித்தலும் | | | | |
| திப்பிட்டிய வாரச்சந்தை இடவசதிகள் அளவை அதிகரித்தல் | 12,300,000 | 2014 ஆம் ஏப்ரல் | 12,030,541 | கணக்காய்வு திகதியான 2015 மார்ச் 19 ஆந் திகதியளவிலும் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வில்லை. |
| கேகாலை மாவட்ட செயலகப் பிரிவின் துத்திரிபிட்டிய பஸ் தரிப்பிட நிர்மாணம் | 24,440,263 | 2014.04.02 | | உடன்படிக்கைப் பிரகாரம் 2014 ஆகஸ்ட் 31 அளவில் முடிவடைய வேண்டிய வேலை கணக்காய்வுத் தினமான 2015 மார்ச் 15 அன்றும் முடிவுறவில்லலை. |
| கேகாலை மாவட்ட செயலகப் பிரிவின் புலத்கோபிட்டிய தகனமண்டப நிர்மாணம் | 21,469,815 | 2014.04.03 | | கணக்காய்வு திகதியான 2015 மார்ச் 20 ஆந் திகதி வரை வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |
| கேகாலை மாவட்ட செயலகப் பிரிவின் புலத்கோபிட்டிய வாரச்சந்தை நிர்மாணம் | 34,385,051 | 2014.01.01 | | - |
| மொனறாகலை பிரதேச செயலகத்தின் கும்புக்கன தெகல்அரம்ப முதல் மாகல்ஆர வரை மின்சார வேலி அமைத்தல் | - | 2014 ஆம் ஆண்டு | 5,411,832 | மின்சார வேலி அமைப்பதற்கு முன்னர் வனப்பாதுகாப்பு திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமை, வேலிக்கம்பங்கள் மற்றும் உப பாகங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியான 2015 மார்ச் 25 ஆந் திகதி வரையிலும் உரிய நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில் லை. நிர்மாணத்திறகான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமல் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |
| மொனறாகலை பிரதேச செயலகத்தின் ரத்தனபிட்டிய நீர் வழங்கல் முறைமையை செயற்படுத்துதல் | 1,485,990 | 2014.09.09 | 1,267,567 | |
| கண்டி மாவட்டத்தின் மினிப்பே, உடதும்பர, மெததும்பர ஆகிய பிரதேச செயலகங்களில் 48 கி.மீற்றர் மேவுகை செய்யப்படும் வகையில் மின்சார வேலி அமைத்தல் | 5,724,098 | 2014.09.22 | | முன்மொழியப்பட்டிருந்த மின்சார வேலி நிர்மாணத்தின் ஒப்பந்தத்தின் பிரகாரம் 2014 ஒக்தோபர் 22 ஆந் திகதி வழங்குவதற்கிருந்த |

2.5 mm High Tensile Galvanized Wire பரிசோதனைத் திகதியான 2015 யூன் 01 ஆந் திகதி வரை வழங்குவதற்கு தவறியமை அடிப்படையில் முழு செயற்திட்டமும் இடைநி றுத்தப்பட்டி ருந்ததுடன், அரசினால் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்தையும் நிறைவேற்றப்பட் ருக்கவில்லை. இங்கு கொள்வனவு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு தமது பொறுப்பினை முறையாக நிறைவேற்றாதிருந்தமை கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்பட்டது. இச்செயற்திட்டத்தை நிறைவேற்றுவதற்குமுடியுமாக இருந்திருந்தால் யானை தாக்குதல்களின் மூலம் 2 மனித உயிர் சேதங்களை தவிர்ப்பதற்கு சந்தர்ப்பம் இருந்ததாக அவதானிக் கப்பட்டது.

**(இ) பணம் விடுவிக்கப்பட்டிருந்தும் முன்னேற்றமடைந்திராத செயற்திட்டங்கள்**

நிர்மாணம் தொடர்பாக இலங்கை மின்சார சபை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை என்பவற்றிற்கு பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், வேலை தொடர்பான உரிய முன்னேற்றம் அறிக்கையிடப்படாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டது.

(i) களுத்துறை பிரதேச செயலகத்தினால் 2014 மார்ச் 20 ஆந் திகதி 05 குடிநீர்த் திட்டங்களுக்காக ரூபா 1,831,400 தொகை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எனினும் அச்செயற்திட்டங்கள் 2015 யூன் 01 ஆந் திகதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 2012 மே 21 ஆந் திகதி நீர் செயற்திட்டத்திற்காக ரூபா 1,000,000 செலுத்தப்பட்டிருந்த போதிலும், அச்செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப் படாதிருந்ததுடன், சபையினால் 2014 ஏப்ரல் 21 ஆந் திகதி அத்தொகையில் ரூபா 107,143 தொகையைக் கழித்து ரூபா 892,857 களுத்துறை பிரதேச செயலகத்திற்கு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. அப்பணத்தை மீண்டும் 2014 நவம்பர் 25 ஆந் திகதியிலிருந்து 07 வாரங்களுக்குள் செயற்திட்டத்தை பூர்த்தி செய்தல் என்ற இணக்கப்பாட்டில் உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டு சபைக்குச் செலுத்தப்பட்டிருந்த போதிலும், 2015 யூன் மாதம் வரையிலும் செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டிருக்க வில்லை.

(ii) குருணாகல் மாவட்டத்தின் 05 பிரதேச செயலக பிரிவுகளுக்கு 12 மின்சார முன்மொழிவுத் திட்டங்களுக்காக மின்சார சபைக்கு ரூபா 2,892,798 செலுத்தப்பட்டு ஓராண்டிற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், அவற்றின் வேலைகளை பூர்த்தி செய்து மின் வழங்கலை மேற்கொள்வதற்கு 2015 ஒக்தோபர் மாதம் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) யட்டியன்தொட்ட பிரதேச செயலகப் பிரிவில் 04 நீர் முன்மொழிவுத் திட்டங்களை செயற்படுத்துவதற்கு 2014 யூன் 25 ஆந் திகதி தேசிய நீர் வழங்கல் மற்றும் நீர் வடிகாலமைப்பு சபைக்கு ரூபா 8,624,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எனினும் 2015 ஒக்தோபர் 20 ஆந் திகதி வரையிலும் குறித்த செயற்திட்டங்களை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) கொத்மலே பிரதேச செயலகப் பிரிவில் செயற்திட்டங்களுக்காக முற்பணமாக ரூபா 1,188,000 பெறப்பட்டு 3½ மாதங்களுக்கு மேற்பட்ட காலம் வேலை ஆரம்பிக்கப்படாமல் 06 சந்தர்ப்பங்களில் அரசின் பணம் தவறாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது.

**(ஈ) செயற்திட்டம் நிறைவு செய்யப்பட்ட போதும் நோக்கங்கள் நிறைவேற்றப்படாத செயற்திட்டங்கள்**

---

பின்வரும் செயற்திட்டங்களில் நிர்மாணங்கள் நிறைவு செய்யப்பட்டிருந்த போதும் அதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(i) நுவரெலியா மாவட்டத்தின் அம்பகமுவ பிரதேச செயலகப் பிரிவில் மழை காலங்களின் போது பிளக்வோடர் கால்வாய் நிரம்பி வழிந்து செல்வதை தவிர்ப்பதற்காக கால்வாயை அகலமாக்குவதற்கு ரூபா 729,000 தொகை மதிப்பீட்டின் கீழ் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. கணக்காய்வு திகதியான 2015 ஏப்ரல் 08 ஆந் திகதி வரையிலும் கால்வாயின் மத்தியில் காணப்பட்ட கருங்கல்லொன்று உடைத்து அகற்றப்படாமை காரணமாக எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ii) நுவரெலியா மாவட்டத்தின் ஹங்குரன்கெத்த பிரதேச செயலகத்தினால் ரூபா 990,000 செலவில் ஹங்குரன்கெத்த வாவி நுழைவாயிலில் வாகன நிறுத்துமிடமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. குறித்த நிறுத்துமிடத்தினுள் மூன்று வாகனங்களுக்கு அதிகமாக நிறுத்தி வைக்கப்படுவது முடியாதிருந்தமையால் செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை.

(iii) நுவரெலியா மாவட்டத்தில் 2014 ஆம் ஆண்டின் போது கர்ப்பிணி மற்றும் தாய்பால் ஊட்டும் தாய்மார்களுக்காக போசணை பொதி வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் நுவரெலியா பிரதேச செயலகத்தின் 72 கிராம சேவையாளர் பிரிவுகளில் 21 இல் மாத்திரமும் ஹங்குரன்கெத்த பிரதேச செயலகப் பிரிவில் 131 கிராம சேவையாளர் பிரிவுகளில் 36 பிரிவுகளில் மாத்திரமும் செயற்படுத்தப்பட்டிருந்தது.

(உ) **செயற்திட்டங்களின் தரம் தொடர்பான சிக்கல்கள்**

-----------------------------------------------------------------------------------------------

பின்வரும் செயற்திட்டங்களில் தரம் தொடர்பான சிக்கல்கள் காணப்பட்டன.

(i) நுவரெலியா மாவட்டத்தில் கணக்காய்வுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட 469 செயற்திட்டங்களுக்காக ரூபா 127,564,526 தொகையான கொங்கிரீட் கலவைக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், அவற்றின் உரிய தரத்தை உறுதிப்படுத்துவதற்காக ஆய்வுகூட பரிசோதனை அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) பொறியியலாளரின் அங்கீகாரமின்றி ரூபா 1,964,000 மதிப்பீட்டு பெறுமதியில் நிர்மாணிக்கப்பட்டிருந்த நுவரெலியா மாவட்டத்தின் வலப்பன பிரதேச செயலகத்தின் முங்வத்த சனசமூக நிலையக் கட்டிடத்தின் தூண்களுக்கிடையே இடைவெளி 22 அடியாக இருந்தமையால் கொங்கிரீட் தளத்தின் நடுப்பகுதி கீழிறங்கியிருந்தது.

(iii) நுவரெலியா மாவட்டத்தின் அம்பகமுவ பதுஹெல மீறியகஹ வீதிக்கு கொங்கிரீட் இடுவதற்காக ரூபா 198,000 செலவிடப்பட்டிருந்த போதிலும், வீதி முழுமையாக கீழிறங்கியிருந்தது.

(iv) நுவரெலியா பிரதேச செயலகத்தினால் கும்வூட் வீதியை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம் 2014 திசெம்பர் 13 ஆம் திகதி வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டு ரூபா 19,967,525 தொகை ஒப்பந்தகாரருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எனினும், கணக்காய்வு திகதியான 2015 மே 20 ஆந் திகதி அளவில் வீதியை நிர்மாணித்து 06 மாதங்கள் கடப்பதற்கு முன்னர் அதிகளவில் பழுதடைந்து காணப்பட்டது.

(v) தேசத்திற்கு மகுடம் தேசிய அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் புத்தளம் நகர அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள 07 குளங்களை புனரமைப்பதற்காக ரூபா 10,918,968 உடன்படிக்கை தொகைக்கு சமூக அடிப்படையிலான சங்கமொன்றிற்கு வழங்கி ரூபா 5,926,723 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அநேகமான வாவிகளில் வரையறை குறிப்பிடப்படாமலும் அத்துமீறிய குடியிருப்பாளர்களை அப்புறப்படுத்தாமலும் நியமமொன்றில்லாது வாவியின் உள்ளிருந்து அகற்றப்பட்ட மண் வாவியின் சுவரின் மேல் இடப்பட்டிருந்தது. அவ்வாறே, மத்திய சுற்றாடல் அதிகாரசபையிடமிருந்தும் கமநல அபிவிருத்தி திணைக்களத்திடமிருந்தும் அங்கீகாரமில்லாமல் இரண்டு வாவிகளில் குருணிக்கற்கள் மற்றும் மண் இடப்பட்டு குவிக்கப்பட்டிருந்தது. அந்த அத்துமீறிய குடியிருப்பாளர்கள் குடியிருத்தல் மற்றும் அத்துமீறிய நிரப்பல்களினால் 01 ஏக்கர் 25 பேர்ச் அளவிலான குளம் 04 பேர்ச் வரையிலும் 54 ஏக்கர் அளவிலான குளமொன்று ¼ ஏக்கர் வரையிலும் குறுகியிருந்தன.

(vi) கட்டிடங்களை ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களின் பிரகாரம் நிர்மாணிப்பதற்காக SLS சான்றுடைய பிளொக் கற்கள் மாத்திரம் பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும், கொத்மலே பிரதேச செயலகத்தினால் ரூபா 15,012,138 பெறுமதியான 13 கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக தரங் குறைந்த பிளொக் கற்கள் பயன்படுத்தப்பட்டிருந்தன.

**(ஊ) நோக்கத்திற்கு முரணான நிர்மாணிப்புக்கள்**

---

அம்பகமுவ பிரதேச செயலகத்தின் லக்ஷபான பொசேஷட் வீதியில் ஒரு தனியார் வீடொன்றிற்கு செல்லும் வீதியொன்றுக்கு கொங்கரீட் இடுவதற்காக ரூபா 297,000 செலவிடப்பட்டிருந்தது.

**(எ) செயற்திட்டத்திற்காக கூடுதலாக கொடுப்பனவு செய்தல்**

---

அம்பகமுவ பிரதேச செயலகத்தின் பரீட்சிக்கப்பட்ட 08 செயற்திட்டங்களில் போலியான ஆய்வுகூட பரிசோதனை அடிப்படையில் கொங்கிரீட்டிற்காக ரூபா 5,140,000 செலுத்தப்பட்டிருந்தது.

**(ஏ) செயற்திட்டத்தை தொடர் வேலையாக்குதல்**

---

2014 பெப்ரவரி 13 ஆந் திகதிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சு செயலாளரின் ‘‘2014 ஆம் ஆண்டின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துதல் தொடர்பான கைநூலில்’’ வீட்டிற்கு வீடு கிராமத்திற்கு கிராமம் ஒரு செயற்திட்டத்தை செயற்படுத்தும் நிபந்தனையின் கீழான இரண்டாவது நிபந்தனையின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து செயற்திட்டங்களும் மீளாய்வாண்டினுள்ளே பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும், செயற்திட்ட செயற்பாடுகள் எதிர்வரும் ஆண்டிற்கு தொடர் வேலையாக்காமல் இருப்பதனை கவனத்திற் கொள்ள வேண்டுமென அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன. அந்த அறிவுறுத்தல்களுக்கு இணங்காத வகையில் மஹரகம பிரதேச செயலகத்தின் மூலம் ரூபா 119,117,328 பெறுமதியான 23 செயற்திட்டங்களும் கொழும்பு பிரதேச செயலகத்தின் மூலம் ரூபா 64,607,605 பெறுமதியான 66 செயற்திட்டங்களும் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை பிரதேச செயலகத்தினால் ரூபா 79,592,077 பெறுமதியான 21 செயற்திட்டங்களும் கடுவெல பிரதேச செயலகத்தினால் ரூபா 73,029,472 பெறுமதியான 41 செயற்திட்டங்களும் குருணாகல் மாவட்டத்தின் 30 பிரதேச செயலகங்களுக்குரித்தாக ரூபா 757,272,922 பெறுமதியான 1,696 செயற்திட்டங்களும் மாத்தளை மாவட்டத்தில் 278,384,336 பெறுமதியான 463 செயற்திட்டங்களும் தொடர் வேலையாக்கப்பட்டிருந்தன.

**3.13 செயலாற்றல்**

---

2014 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அமைச்சின் செயன் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**பிரதான பணிகளுக்கு முரணான செயற் பணிகள்**

---

அமைச்சால் தனது நோக்கங்களுக்குரிய பணிகளுக்கு முரணாக செயற்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன் தெரிவுப் பரிசோதனைகளின் போது அவ்வாறு கண்டறியப்பட்ட சந்தர்ப்பங்கள் சில கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்தின் விடயப் பரப்பிற்கு உரித்தாகாத இடர் முகாமைத்துவ பணியான வரட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீர் சேகரிக்கும் பாத்திரங்கள் வழங்குவதற்காக திணைக்களத்தினால் ரூபா 106,873,148 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இப்பணிக்குச் செலவிடப்பட்ட ரூபா 106,873,148 தொகையில் ரூபா 56,390,682 தொகை 105-2-1-1-2105 ‘‘காணி மற்றும் காணி

மேம்படுத்தல்'' செலவின விடயத்திற்காக வழங்கப்படும் மூலதன ஏற்பாடுகளிலிருந்து அமைச்சினதோ அல்லது திறைசேரியினதோ அங்கீகாரம் இல்லாமல் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ii) மிகவும் அவசரமான அல்லது மிகவும் விசேடமான விடயமொன்றிற்காக ரூபா 90 மில்லியனிற்கு மேற்பட்ட மதிப்பீட்டுடன் கூடிய இக்கொள்வனவு, அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 2.14.1 வழிகாட்டலின் பிரகாம் அமைச்சரவை கொள்வனவுக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்படாமல் திணைக்கள கொள்வனவுக் குழுவினால் நிறைவேற்றப்பட்டிருந்தது. அவ்வாறே அவ்வாறான சந்தர்ப்பங்களின் போது அதற்கு காரணமான விடயங்கள் தெளிவாக எழுத்து மூலம் அறிக்கையிடப்பட வேண்டியதுடன் அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்தினால் அது நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை.

(iii) நீர்ப் பாத்திரங்கள் வழங்குனருக்கு முற்பணம் வழங்கல் பிணைப் பாதுகாப்பொன்று (Advance Payment Guarantee) பெற்றுக்கொள்ளப்படாது ரூபா ஒரு மில்லியன் முற்பணமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(iv) கணக்காய்விற்கு கிடைத்த தகவல்களின் பிரகாரம் கொள்வனவு செய்யப்பட்ட 224,694 நீர்ப் பாத்திரங்களுக்காக செலுத்தப்பட்டிருந்த பணம் ரூபா 105,770,708 ஆக இருந்ததுடன், அதில் அண்ணளவாக ரூபா 13,867,385 தொகையான 25,894 நீர்ப் பாத்திரங்கள் நிர்ணயிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு கிடைத்ததாக உறுதிப்படுத்தல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(v) நீர்ப் பாத்திரங்களை உரிய மாவட்டங்களுக்கு போக்குவரத்து செய்வதற்காக விலை கோரலின்றி இரண்டு போக்குவரத்து நிறுவனங்கள் தெரிவுசெய்யப்பட்டு போக்குவரத்திற்காக அந் நிறுவனங்களுக்கு ரூபா 1,102,440 செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 58 உள்ளூராட்சி மன்றங்களுக்கு கொடிக் கம்பங்களாக பயன்படுத்தும் பொருட்டு ரூபா 36,509,127 கிரயத்திலான 32,976 கல்வனைஸ் குழாய்கள் 2014 திசெம்பர் மாதத்தின் போது கொள்வனவு செய்து பகிரப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) உள்ளூராட்சி மன்றங்களுக்குக் கொடிக் கம்பங்களை வழங்குதல் திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்தின் விடயப் பரப்பிற்கு உரித்தான பணி அல்லாததுடன் கொடிக் கம்பங்களை வழங்குமாறு நாட்டின் எந்தவொரு உள்ளூராட்சி மன்றத்தினாலும் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கு மேலதிகமாக கொடிக் கம்பங்களை பகிர்ந்தளிப்பதற்காக 58 உள்ளூராட்சி மன்றங்கள் தெரிவுசெய்யப்பட்ட முறை தொடர்பான நியதிகள் காணப்படவில்லை.

(ii) இக் கொள்வனவிற்காக 2014 ஆம் ஆண்டின் போது நிதிஏற்பாடு மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், வருடாந்த கொள்வனவுத் திட்டத்தின் மூலம் மொத்தக் கிரய மதிப்பீடொன்று அங்கீகரித்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) 48 உள்ளூராட்சி மன்றங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட 28,310 குழாய்கள் நிதிப்பிரமாணம் 751 இன் பிரகாரம் இருப்பு பதிவேடுகளுக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iv) 17 உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்கப்பட்டிருந்த 5,398 குழாய்கள் திணைக்களத்தின் அனுமதியின்றி வேறு 30 உள்ளூராட்சி மன்றங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன.

(v) 33 உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்கப்பட்டிருந்த 9,195 குழாய்கள் அந்நிறுவனங்களின் தலைவர்கள், உப தலைவர்கள் அல்லது உறுப்பினர்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன், 11 நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்த 2,374 குழாய்கள் திணைக்களத்தின் அனுமதியின்றி வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டிருந்தன.

(இ) நாட்டிலுள்ள அனைத்து முச்சக்கர வண்டி சாரதிகளுக்காக ஆயுள் காப்புறுதி மற்றும் ஓய்வூதிய சம்பள முறைமையொன்றை அறிமுகப்படுத்துவதற்கான தகவல்களை சேகரிப்பதற்கு 2014 திசெம்பர் மாதத்தின் போது ரூபா 2,402,400 செலவு செய்து 1.1 மில்லியன் மாதிரிப் படிவங்கள் நாட்டின் சகல மாவட்டங்களுக்கும் திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்தினால் பகிரப்பட்டிருந்தது. இந்நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துவதற்காக 2014 ஆம் ஆண்டில் பாதீட்டு மதிப்பீட்டு மூலம் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், நிகழ்ச்சித்திட்டத்தை செயற்படுத்தும் முறை தொடர்பாக எவ்வித நடைமுறையொன்றும் திட்டமொன்றும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் மாவட்ட செயலகங்களிலிருந்து தகவல்கள் கொண்டு வரப்படாமல் இருந்ததுடன், அது தொடர்பாக பின் தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2015 மார்ச் அளவிலும் நிகழ்ச்சித்திட்டத்தின் அனைத்து நடவடிக்கைகளும் தோல்வியடைந்திருந்ததுடன், செலவிடப்பட்ட அனைத்து பணமும் பயனற்ற செலவினமாகியிருந்தது.

(ஈ) 2015 இன் பாதீட்டு முன்மொழிவுகளில் உள்ளடக்கப்பட்ட சமுர்த்தி நலனாளிகளின் உதவுதொகைகளை அதிகரித்தல் மற்றும் தொடர்ந்தும் உதவுதொகைகள் வழங்கப்பட வேண்டிய குடும்பங்களை இனங்காண்பதற்கான கணிப்பீட்டிற்குரிய 2.81 மில்லியன் மாதிரிப்படிவங்கள் அச்சிடுவதற்காக 2014 திசெம்பர் மாதத்தின் போது ரூபா 8,227,408 செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இந் நிகழ்ச்சித்திட்டம் 2014 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டமொன்றின் மூலம் அங்கீகரிக்கப்படாதிருந்ததுடன், வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டு மூலம் குறிப்பான நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) மாதிரிப்படிவங்களை அச்சிடுவதற்காக கொள்வனவு ஆவணங்கள் வழங்கல் உட்பட கொள்வனவிற்குரிய அனைத்து செயற்பாடுகளும் ஒரே நாளில் நிறைவேற்றப்பட்டிருந்தன.

(iii) ரூபா 907,680 கிரயத்திலான 312,993 மாதிரிப் படிவங்களை பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்காமல் அவை விளைவற்றுக் காணப்பட்டதுடன், மாவட்ட அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டிருந்த மாதிரிப்படிவங்கள் பயன்படுத்தப்படாமல் மீண்டும் திணைக்களத்தின் களஞ்சியத்திற்கு அனுப்பப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(iv) இக்கணிப்பீட்டின் மூலம் இனங்காணப்பட்ட புதிய நலனாலிகள் தொடர்பாக விபரமான தகவல்களை 2015 மே வரையிலும் திணைக்களம் சேகரித்திருக்கவில்லை. 2015 மே அளவில் இந்நிகழ்ச்சித்திட்டம் முழுமையாக கைவிடப்பட்டிருந்ததுடன் செலவிடப்பட்ட தொகை பயனற்ற செலவினமாக அவதானிக்கப்பட்டது.

(உ) திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்தின் 2014 நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களில் மேற்கொள்ளப்பட்டிருந்த விளம்பர நடவடிக்கைகள் தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்தின் 2014 ஆம் ஆண்டின் வாழ்வாதார அபிவிருத்தி நிகழச்சித்திட்டங்களில் உள்ளடக்கப் படாதிருந்த " 1210 கிராமிய பாலங்களை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக'' பொருளதார அபிவிருத்தி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்த தொலைக்காட்சி விளம்பர நிகழ்ச்சிக்காக ரூபா 5,040,000 செயலாளரின் ஆலோசனையின் பிரகாரம் உரிய ஊடக நிறுவகத்திற்கு கொடுப்பனவு செய்வதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருந்தது.

(ii) ''இசுறுமத் நிவஹனக்'' நிகழ்ச்சித்திட்டத்தின் விளம்பர நடவடிக்கைகளுக்காக திணைக்களத்தின் ஊடக உத்தியோகத்தரின் தனிப்பட்ட விருப்பின் பிரகாரமும் முன் அங்கீகாரமின்றியும் 2014 நவம்பர் மாதத்திற்கு அண்மித்த இரண்டு தினங்களில் 09 வெளியிடப்பட்ட விளம்பரங்களுக்காக திணைக்களத்தினால் ரூபா 997,476 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(iii) அமைச்சினது செயலாளரின் ஆலோசனையின் பெயரில் தயாரிக்கப்பட்டதாக போலியாக குறிப்பிடப்பட்டு திணைக்கள கொள்வனவுக் குழுவின் முறையான அங்கீகாரமின்றி 30 விநாடி ரூபவாஹினி குறுகிய விளம்பரங்களுக்காக உற்பத்தி நிறுவனமொன்றுக்கு ரூபா 707,625 செலுத்தப்பட்டிருந்ததுடன், இந்நிகழ்ச்சித்திட்டங்கள் 2015 மே மாதம் வரை வரை ஒளிபரப்படவில்லை.

(iv) அப்போதிருந்த சனாதிபதி அவர்களின் புகைப்படத்துடன் 7 பத்திரிகைகளில் வெளியிடப்பட்டிருந்த விளம்பரத்திற்காக ரூபா 22,896,680 தொகையை தீர்வு செய்வதற்காக திணைக்களம் கடப்பாடு ஏற்படுத்திக் கொண்டிருந்தது.

**3.14 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்**

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரியனவாக இருந்தன. தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது கண்டறியப்பட்ட அவ்வாறான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) உலக உணவு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் யப்பான் அரசின் மூலம் 1,080,864 டின் மீன் 2014 யூலை 09 ஆந் திகதி உலக உணவு நிகழ்ச்சித்திட்டத்திற்கு (WFP) கிடைக்கப் பெற்றிருந்தது. இந்த உணவுப் பொருட்கள் பாவனைக்கு பொருத்தமானதென இலங்கை தர நிறுவகத்திடமிருந்து உறுதிப்படுத்தல் பெறப்படுவதற்கு முன்னர் டின்னில் அடைக்கப்பட்ட 109,536 டின் மீன்கள் செயற்திட்டத்தின் மூலம் மாவட்ட மொத்தக் களஞ்சியங்களுக்கு வழங்கப்பட்டிருந்தன.

(ஆ) அமைச்சினால் 2014 யூலை 22 ஆந் திகதி "டொஷிபா ஈ ஸ்டுடியோ 2007" வகையான மூன்று நிழற்பட பிரதி இயந்திரங்கள் ஒன்று ரூபா 211,680 (பெறுமதி சேர் வரியுடன்) வீதம் ரூபா 635,040 செலுத்தப்பட்டுத் தனியார் நிறுவனமொன்றிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. மேற்படி நிழற்பட இயந்திரத்தின் தொழில்நுட்ப மாதிரிகளை விட கூடிய வகையிலான நிழற்பட பிரதி இயந்திரமொன்று ரூபா 172,480 செலவில் 2014 யூலை 22 ஆந் திகதி அரச கூட்டுத்தாபனமொன்றிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அரச நிறுவனமொன்றல்லாத தனியார் நிறுவனமொன்றிடமிருந்து நிழற்பட பிரதி இயந்திரங்களைக் கொள்வனவு செய்தமையால் அரசிற்கு ரூபா 117,600 நிதிசார் நட்டம் ஏற்பட்டிருந்தது.

(இ) பிரதி அமைச்சரின் அலுவலகத்தை ஸ்தாபிப்பதற்காக அமைச்சினால் மஹாவெலி அதிகாரசபையுடன் உடன்டிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. அரசின் விலை மதிப்பாளரால் குறித்த கட்டிடத்தின் மாதாந்த வாடகை ரூபா 575,000 ஆக மதிப்பீடு செய்யப்பட்டிருக்கையில் அமைச்சினால் மாதாந்தம் ரூபா 642,000 வாடகை செலுத்துவதற்கு இணங்க உடன்டிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. மதிப்பீட்டு வாடகையை விட ரூபா 67,000 தொகை மாதாந்தம் செலுத்தியதால் 2013 மே மாதம் முதல் 2014 ஒக்தோபர் மாதம் வரை ரூபா 1,206,000 கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) ஹொரண பிரதேச செயலகப் பிரிவின் திக்ஹேனபுர பிரதான வீதியின் 0+850 வரையான பகுதியின் 590 m2 பிரதேசமொன்றின் சராசரி எஸ்போல்ட் தட்டின் தடிப்பு 25.7mm ஆகும். இத்தடிப்பிற்குத் தேவையான எஸ்போல்ட் அளவு 36 தொன்னாக இருந்த போதிலும், 58 தொன்னிற்காக கூடுதலாக ரூபா 279,400 தொகை (22x12700) கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வீதியின் 0+850 - 1+850 பிரதேசத்தின் எஸ்போல்ட் சராசரி பௌதீக தடிப்பு 36.6 mm மற்றும் அகலம் 7.46 mm ஆக இருந்ததுடன், கொடுப்பனவிற்காக தடிப்பு 48mm அகலம் 7.9 mm ஆகவும் எடுக்கப்பட்டிருந்தது. அதன் மூலம் குறித்த ஒப்பந்தகாரர் கம்பனிக்கு எஸ்போல்ட்டிற்கென ரூபா 3,175,000 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே அவ்வீதியின் 1+894 - 3+455 வரையான பிரதேசத்தின் தடிப்பு 40 mm ஆக பேணப்படுதல் போதுமானதாக இருந்த போதிலும், தடிப்பு 50mm ஆக மிகை மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. எனினும் பௌதீக பரிசோதனையின் போது வீதியில் எஸ்போல்ட் தடிப்பு 36.6mm ஆக இருந்தமை அவதானிக்கப்பட்டதுடன், 48 mm தடிப்பாக கருத்திற் கொண்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 167 தொன் எஸ்போல்ட்டிற்கு ரூபா 2,120,900 கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(உ) இரத்தினபுரி மாவட்டத்தின் நிரல்கம அலுப்பொத்த வீதி நிறைவேற்றுப் பொறியயிலாளர் மற்றும் ஆராய்ச்சிகூட உத்தியோகத்தர்களுடனான நேரடிப் பரிசீலனையின்போது வீதியின் எஸ்போல்ட் தடிப்பு 48 mm ஆக அவதானிக்கப்பட்டது. எனினும் கொடுப்பனவு செய்யும் போது வீதியின் தடிப்பு 52 mm மற்றும் 2.38 அழுத்தத்திற்குப் பதிலாக 2.38 ஆக கருதப்பட்டு கூடுதலாக 273 தொன் எஸ்போல்ட் இற்காக ரூபா 3,723,720 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வீதியன் மொத்த தூரத்திற்காக ABC 7,545m3 இற்காக மிகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், உள்ளபடியாக ABC 8,423.9 m3 பயன்படுத்தப்பட்டதாக குறிப்பிடப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மதிப்பீட்டை மிகைத்து பயன்படுத்தப்பட்ட ABC 878.9 m3 இற்காக முறையான அங்கீகாரம் பெறப்படாமல் குறித்த

ஒப்பந்தகாரக் கம்பனிக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே வீதிக்காக 146 தொன் Binder Course இற்காக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. வீதி பௌதீக பரிசோதனையின் போது உத்தேசிக்கப்பட்ட இடத்திற்காக பயன்படுத்தப்படாதிருந்ததுடன் 02 மணித்தியால காலத்தில் 6.5 km வீதியின் மொத்த தூரத்திற்காக 146 தொன் Binder Courxe வழங்கப்பட்டதாக பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 02 மணித்தியால காலத்தில் 146 தொன் வீதிக்கு வழங்குதல் நடைமுறைச் சாத்தியமற்றதாக இருந்ததுடன், Binder Courxe வீதிக்கு இடப்பட்டதை உறுதிப்படுத்தாமல் வழங்குனருக்கு ரூபா 1,947,640 செலுத்தப்பட்டிருந்தது.

(ஊ) 2013 சனவரி 10 ஆந் திகதிய 2013/1 ஆம் இலக்க சமுர்த்தி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் 2.1(ii) இன் பிரகாரம் 2014 ஆம் ஆண்டில் 108,783 நிவாரணம் பெறுவோருக்காக வீடமைப்பு லொத்தர் நிதியத்திற்கு ரூபா 1,087,830 தொகை அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. 2012 ஆம் ஆண்டிலிருந்து வீடமைப்பு சீட்டிழுப்பு ஒன்று இடம்பெறாமல் இருந்ததுடன், 2007 ஆம் ஆண்டில் வெற்றிபெற்ற லொத்தர் வெற்றியாளருக்கு வழங்கப்பட வேண்டிய ரூபா 75,000 பணத்தொக வழங்கப்பட்டிருக்கவில்லை.

(எ) அமைச்சிலிருந்து நுவரெலியா மாவட்ட செயலகத்தின் திட்டமிடல் பிரிவிற்கு இணைக்கப்பட்ட இரண்டு உத்தியோகத்தர்கள் அப்பிரிவில் சேவை புரியாமல் மக்கள் பிரதிநிதியொருவருக்கு சேவையை வழங்கி 2010 – 2014 காலப்பகுதியில் ரூபா 1,785,530 சம்பளமாக வழங்கப்பட்டிருந்தது.

(ஏ) அமைச்சின் கீழ் செயற்படும் வெளிநாட்டு உதவிச் செயற்திட்டமொன்றான கிராமிய பாலங்கள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட 210 பாலங்களைத் திறப்பதற்கும் 1,000 புதிய பாலங்களை தாபிக்கும் வேலைகளை ஆரம்பித்தல் தொடர்பாகவும் 09 தேசிய பத்திரிகைகளில் முழுப் பக்கத்தில் விளம்பரத்தை மேற்கொள்வதற்காக ரூபா 3,768,352 செலவு செய்யப்பட்டிருந்தது. எனினும் செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் இந்த 210 பாலங்களின் அநேகமானவை வேலை முடிவடையாமல் இருந்ததுடன், 1,000 பாலங்களுக்காக ஆரம்ப உடன்படிக்கைகளும் கையொப்பமிடப்பட்டிருக்கவில்லை. தேர்தல் காலங்களில் அபேட்சகர்களை ஊக்குவிப்பதற்கு காரணமாகும் பத்திரிகை விளம்பரங்களை மேற்கொள்வதனைத் தவிர்க்குமாறு தேர்தல்கள் ஆணையாளரால் அறிவுறுத்தல்கள் வழங்கியிருக்கையில் அமைச்சின் மூலம் செயற்படுத்தப்பட்ட இச்செயற்திட்டம் தொடர்பான பத்திரிகை அறிவித்தலுக்கு சனாதிபதி தேர்தல்கள் அபேட்சகரின் புகைப்படமொன்று உள்ளடக்கப்பட்டிருந்தமையால் சனாதிபதி தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காக இவ்விளம்பரம் வெளியிடப்பட்டிருந்ததாக அவதானிக்கப்பட்டது.

(ஐ) திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தை நிர்மாணிப்பதற்காக பொரல்ல காசல் வீதியில் அமைந்துள்ள கட்டிடம் மற்றும் சமுர்த்தி ஆணையாளர் நாயகத் திணைக்களம் நடாத்திச் செல்லப்பட்ட அலுவலகம் என்பவற்றை திருத்தம் செய்யும் நடவடிக்கைகளுக்காக 2014 ஆம் ஆண்டின் போது திணைக்களத்தினால் ரூபா 12.248 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

(i) திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தை 2014 ஏப்ரல் 27 ஆந் திகதி முதல் செத்சிரிபாயா வளவில் இருந்து அகற்றுவதற்கு காரணமான விடயங்கள் கணக்காய்விற்கு தெளிவுபடுத்தப்படாமல் இருந்ததுடன், அதற்காக பெற்றுக்கொண்ட உரிய அதிகாரத்துடன்

கூடிய முன் அங்கீகாரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. செத்சிரிபாயா வளவில் இருந்து தலைமை அலுவலகத்தை அகற்றிய போதும் மாாந்தம் ரூபா 6 மில்லியனிற்கு அண்மித்த வாடகையொன்று 2014 யூலை மாதம் வரை செலுத்தப்பட்டிருந்தது.

(ii) அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 3.2 வழிகாட்டலின் பிரகாரம் வேலைக்கான ஒப்பந்தம் தொடர்பாக ஒப்பந்தத்தை வழங்குவதற்காக தகைமைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் “இக்டாட் (ICTAD) தேசிய பதிவு செய்தல் முறைமையின் கீழ் செல்லுபடி மற்றும் தகைமையான பதிவொன்று கேள்வி சமர்ப்பிக்கப்படும் சந்தர்ப்பத்தில் உள்நாட்டு ஒப்பந்தகாரருக்கு இருக்க வேண்டிய போதிலும், 2011 செப்தம்பர் 24 ஆந் திகதி முதல் தெரிவுசெய்யப்பட்ட கம்பனியின் நிர்மாண பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்தின் (ICTAD) பதிவு காலாவதியாகியிருந்தது.

(iii) அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 2.14.1 வழிகாட்டலின் பிரகாரம் நிர்மாண ஒப்பந்தங்களுக்காக விலை ஒப்பீட்டு முறைமையின் கீழ் திணைக்கள கொள்வனவு குழுவொன்றின் மூலம் கூறுவிலை கோரப்பட்டால் முத்திரையிடப்பட்ட 5 விலை விபரங்களுக்கு குறையாத எண்ணிக்கை கோரப்பட வேண்டிய போதிலும், இக்கொள்வனவின் போது 3 நிறுவனங்களிடமிருந்து மாத்திரம் கூறுவிலை கோரப்பட்டிருந்தன.

(iv) கூறுவிலை கோரும் படிவங்கள் கம்பனிகளுக்கு 2014 ஏப்ரல் 07 ஆந் திகதி அனுப்பி வைக்கப்பட்டிருந்த போதிலும், இரண்டு கம்பனிகளிடமிருந்து அத்திகதிக்கு முன்னரே கூறுவிலை சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

(v) கூறுவிலை கோருவதிலிருந்து முற்பணக் கொடுப்பனவிற்காக உறுதிச்சீட்டு தயாரித்தல் வரை 7 செயற்பாடுகள் ஒரே நாளில் மேற்கொள்ளப்பட்டிருந்தமை கோவையின் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்டது.

(vi) அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 2.7.5 வழிகாட்டலின் பிரகாரம் வரிசை அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் அல்லது அதற்கு சமமான மட்டத்தில் பணிப்பாளரொருவர் உட்பட மூன்று பேருடன் கூடிய திணைக்கள கொள்வனவுக் குழுவின் மூலம் அதற்குரிய அங்கீகாரம் வழங்கப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக திணைக்களத்தின் கொள்வனவுக் குழு நான்கு உத்தியோகத்தர்களைக் கொண்டிருந்தது.

(vii) அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 8.9.1 வழிகாட்டலின் பிரகாரம் கேள்வி இணங்கப்பட்டதன் பின்னர் இரு தரப்பினரால் முறையான எழுத்துமூல உடன்படிக்கையொன்றுக்கு வர வேண்டிய போதிலும், இந்நிர்மாண ஒப்பந்தத்தின் போது திணைக்களம் அவ்வாறான உடன்படிக்கையொன்றுக்கு வந்திருக்கவில்லை.

(viii) அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 5.4.4(i) வழிகாட்டலின் பிரகாரம் ஏற்றுக்கொள்ளக்கூடிய ‘முற்பணகொடுப்பனவு பாதுகாப்பொன்று’’ சமர்ப்பித்தல் அடிப்படையில் ஒப்பந்த தொகையில் கூடியது 20 சதவீதம் என்ற வகையில் வேலை ஆரம்ப முற்பணமொன்று வழங்க முடியுமான போதும் ஒப்பந்தப் பெறுமதியான ரூபா 3,772,245 தொகையில் ரூபா 2,000,000, அதாவது, 53 சதவீத முற்பணம் ஏற்றுக்கொள்ளக்கூடிய முற்பணக் கொடுப்பனவிற்கான

பாதுகாப்பு பிணையொன்று பெற்றுக்கொள்ளப்படாது செலுத்தப்பட்டிருந்தது.

(ix) ஒரு வளவின் நிர்மாணம் மற்றும் திருத்தங்களுக்காக ரூபா 5,980,030 ஆன எல்லையை மிகைத்து அங்கீகாரம் இல்லாமல் ரூபா 1,629,397 தொகை கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(x) இந்நிர்மாண நடவடிக்கைகளில் இறுதிக் கொடுப்பனவின் போது செய்ப்பட்ட வேலை தொடர்பான பொறியியலாளர் அறிக்கை இல்லாமல் ஒப்பந்தகாரருக்கு பணம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(xi) ஒரு திருத்த நடவடிக்கைக்குரிய செயற்பாடுகள் ஒப்பந்தகாரரால் பூர்த்தி செய்யப்படாமல் இருந்ததுடன், வழங்கப்பட்டிருந்த முற்பணத்தில் மேலும் அறவிடப்பட வேண்டிய ரூபா 1,500,000 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே இவ்வொப்பந்தத்தின் சகல நடவடிக்கைகளும் 2015 மே மாதம் வரையில் இடைநடுவில் கைவிடப்பட்டிருந்ததுடன் திணைக்களத்திற்குரிய சகல அலுவலகங்களும் அவ்வளவுகளிலிருந்து அகற்றப்பட்டிருந்த போதிலும், ஒப்பந்தகாரரிடமிருந்து மேலும் அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்ட மீதிகள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஓ) திவிநெகும தேசிய சம்மேளனம் 2014 நவம்பர் மாதத்தின் போது நடாத்தப்பட்டிருந்ததுடன், அதற்காக அண்ணளவாக ரூபா 72 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2013 இன் 01 ஆம் இலக்க திவிநெகும அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் திவிநெகும சமூக அமைப்புக்கள், திவிநெகும பிரதேச அமைப்புக்கள், திவிநெகும மாவட்டக் குழுக்கள் தாபிக்கப்பட்டதன் பின்னர் சமூகஆர்வலர்கள் பங்குபற்றலுடன், திவிநெகும சம்மேளனம் நடாத்தப்பட வேண்டிய போதிலும், அவ்வனைத்து விடயங்களும் நிறைவேற்றுவதற்கு முன்னர் திவிநெகும சம்மேளனம் நடாத்தப்பட்டிருந்தது.

(ii) சம்மேளனத்தை நடாத்துவதற்காக 2014 பாதீட்டின் மூலம் குறிப்பான நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்படாமல் இருந்ததுடன், சம்மேளனத்திற்கு செலவிட எதிர்பார்த்த அனைத்து செலவினங்கள் உட்பட கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டு அதற்காக முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) நாற்பதாயிரம் ஆர்வலர்களை பங்குபெறச் செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட சம்மேளனத்திற்காக போதுமான இடவசதிகளுடன் கூடிய இடமொன்றைத் தெரிவுசெய்வதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் தற்காலிக கூடாரங்கள் மற்றும் மேடைகள் அமைத்தல், ஒலிபெருக்கி இயந்திரங்கள், காற்றுச்சீராக்கி இயந்திரங்கள் என்பவற்றைப் பெற்றுக்கொள்வதற்கும் நாற்காலிகளைப் பெற்றுக்கொள்வதற்கும் விலைக்கு பெற்றுக்கொள்ளல் போன்றவற்றிற்கும் ரூபா 16,629,435 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(iv) இச்சம்மேளனம் சமூக ஆர்வலர்களின் பங்களிப்புடன் நடாத்தப்பட்டிருந்த போதிலும், சம்மேளனம் தொடர்பாக பொது மக்களுக்கு பத்திரிகை மூலம் பிரசித்திப்படுத்தலை வழங்குவதற்கு ரூபா 1,954,300 தொகை செலவு செய்யப்பட்டிருந்ததுடன், அதன்

போது பத்திரிகை விளம்பரங்களுக்காக நிறுவனங்களைத் தெரிவு செய்கையில் அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகள் எதுவும் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(v) திவிநெகும முதலாவது சம்மேளனத்தினன் தலைவர் பதவியை அறிவிப்பது உட்பட சம்மேளனத்தை நடாத்துவதன் மூலம் திவிநெகும அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசிய கொள்கையொன்றை தயாரிப்பதற்காக நடவடிக்கை எடுத்துள்ளதாக உறுதிப்படுத்துவதற்கு சம்மேளனம் தொடர்பாக அறிக்கையொன்று 2015 மார்ச் மாதம் வரையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் முறையான சமூக அமைப்புக்களை தாபிப்பதற்கு முன்னர் அதிகளவில் பணம் செலவிடப்பட்டு தேசிய சம்மேளமொன்று நடாத்தியமை சர்ச்சைக்குரிய விடயமொன்றாக இருந்தது.

(ஓ) திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்தினால் 2015 ஆம் ஆண்டிற்காக திவிநெகும நலனாளிகள் குடும்பங்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக ஒன்று ரூபா 5.88 வீதம் 5,000,000 திவிநெகும நாட்காட்டிகளை அச்சிடுவதற்காக வெளியீட்டு நிறுவனமொன்றுக்கு 2014 திசெம்பர மாதத்தின் போது 05 கட்டங்களின் கீழ் மொத்தம் ரூபா 29,400,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மேற் குறித்த செலவினங்களுக்காக 2014 ஆம் ஆண்டின் பாதீட்டு மதிப்பீடுகளிலிருந்து நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், முன்னரே திட்டமிடப்படாமல் 12 நாட்கள் போன்ற குறுகிய காலப்பகுதியில் 04 சந்தர்ப்பங்களில் நாட்காட்டிகளது எண்ணிக்கையினை பகுதி பகுதியாக அச்சிட்டமையால் முழு இருப்பையும் ஒரே தடவையில் கட்டளையிடுவதன் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்த விலை நன்மையை அரசு இழந்திருந்தது.

(ii) 2014 திசெம்பர் வரையில் திவிநெகும நிவாரண உதவிகள் பெறும் மொத்த நலனாளி குடும்பங்களின் எண்ணிக்கை 1,479,811 ஆக இருந்த போதிலும், 5,000,000 நாட்காட்டிகள் அச்சிடப்பட்டிருந்ததுடன், அது நலனாளி குடும்பங்களை விட 338 சதவீத அதிகரிப்புமாகும்.

(iii) அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 2.14.1 வழிகாட்டலின் பிரகாரம் பொருட்கள், வேலைகள் மற்றும் மதியுரை அல்லாத சேவைகள் கொள்வனவிற்காக சந்தை ஒப்பீட்டு முறைமை பின்பற்றப்படும் போது கொள்வனவுச் செயற்பாட்டின் பெறுமதி ரூபா 10 மில்லியன் வரை மாத்திரம் திணைக்கள கொள்வனவுக் குழுவொன்று மூலம் மேற்கொள்ள முடியுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அவ்வதிகார எல்லையை மிகைத்து ரூபா 29,400,000 பெறுமதியான மேற்படி கொள்வனவு செயற்பாடு திவிநெகும திணைக்களத்தின் கொள்வனவுக் குழுவினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(iv) 2014 திசெம்பர் 02 ஆந் திகதிய பீஆர்ஈ/2015/4பீ ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் சனாதிபதி தேர்தலை நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்ட கால எல்லைக்குள் எந்தவொரு சனாதிபதி அபேட்சகர் ஒருவரின் அரசியல் செயற்பாடுகளையும் மேம்படுத்துவதற்கு வெகுமதிகள் அல்லது நன்கொடைகள் வழங்கக்

கூடாத போதிலும், சனாதிபதி தேர்தலில் போட்டியிடும் அபேட்சகர் ஒருவரின் புகைப்படத்துடன் உரிய நாட்காட்டி அச்சிடப்பட்டிருந்தது.

(v) 25 மாவட்டங்களின் 12 மாவட்டங்களில் தேவையை விட 319,593 நாட்காட்டிகள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 1,879,205 செலவிடப்பட்டுமிருந்தது.

(ஔ) வவுனியா மாவட்டத்தின் கிராமத்திற்கு கிராமம் வீட்டுக்கு வீடு நிகழ்ச்சித்திட்டத்திற்கு கிடைத்த ரூபா 100 மில்லியனில் ரூபா 42.135 மில்லியன் வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கு செலவிடப்பட்டிருந்தது. இங்கு மாவட்ட திட்டமிடல் பிரிவினால் நலன் பெறும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூபா 49,000, ரூபா 10,000, ரூபா 9,000, ரூபா 7,800, ரூபா 6,500, ரூபா 2,500 வீதம் செலுத்தப்பட்டிருந்தது. அதில் பரிந்துரைக்கப்பட்டிருந்த தொகையை பெற்றுக் கொண்டதாக பொது 36(ஆ) படிவத்தில் கையொப்பமிடப்பட்டு, அதனைவிடக் குறைந்த அளவு தொகையொன்றே வழங்கப்பட்டிருந்ததன் அடிப்படையில் நிதி முறைகேடொன்று இடம்பெற்றிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது நலன்களைப் பெறும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூபா 6,760,000 செலுத்தப்பட்டிருந்ததாக பொது 36 படிவத்தின் மூலம் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் உள்ளவாறாக நலனாளிகளுக்கு கிடைத்த தொகை ரூபா 4,061,000 ஆகும். அத்துடன் கொடுப்பனவைப் பெற்றுக் கொண்டதாக கொடுப்பனவு உறுதிச்சீட்டுடன் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணத்தில் காணப்பட்ட கையொப்பங்களிற்கும் சமுர்த்தி வங்கியில் பணம் பெற்றுக் கொண்டமைக்காக ஆவணத்தில் இடப்பட்ட கையொப்பங்களிற்கும் இடையே வேறுபாடுகள் காணப்பட்டன.

## 3.15 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்ற விதத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அவ்வாறு அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

### (அ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல் கோவைக்கு விதிவிலக்கானவை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அரசியல் பிரதிநிதிகள் மற்றும் அரச உத்தியோகத்தர்களுக்கு 2014 ஆம் ஆண்டில் அரச அபிவிருத்தி முன்மொழிவு முறை தொடர்பாக அறிவுறுத்தும் செயலமர்விற்காக உணவு மற்றும் பானங்கள் வழங்கியமைக்காக ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய நடவடிக்கைகள் ஆராய்ச்சி மற்றும் பயிற்சியளிக்கும் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய பணத்தில் 38.6 சதவீதம், அதாவது ரூபா 1,000,000 முற்பணமாக வழங்கப்பட்டிருந்தது.

(ii) எபிட்டவத்த கைத்தொழில் கிராமத்திற்கு புகையிலை பதப்படுத்தும் இயந்திரம் ஒன்றை கொள்வனவு செய்வதற்காக இயந்திரத்தின் மொத்தப் பெறுமதியில் 50 சதவீதம், அதாவது ரூபா 554,064 முற்பணமாக இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபைக்கு செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 06 மாத கால தாமதத்தின் பின் பொருட்கள் கிடைத்திருந்தன.

(iii) ரூபா 115 மில்லியன் செலவில் மரதகஹமுல அரிசி களஞ்சியசாலைக்கு அண்மையில் அரிசி விற்பனை நிலையமொன்றை நிர்மாணிப்பதற்காக அமைச்சின் கொள்வனவு சபையினது அதிகாரத்தைப் பெற்றுக் கொண்டிருக்கவில்லை.

(iv) மரதகஹமுல அரிசி விற்பனை நிலையத்தை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம், விலை மனுக் கோரப்படாமல் அரச கூட்டுத்தாபனம் ஒன்றிற்கு வழங்கப்பட்டிருந்ததுடன், அதற்காக அக்கூட்டுத்தாபனத்திற்கு ஒப்பந்தப் பணத்தில் 43.5 சதவீதம், அதாவது ரூபா 50 மில்லியன் முற்பணமாக வழங்கப்பட்டிருந்தது.

(v) நுவரெலியா பிரதேச செயலகம் மற்றும் ஏனைய 4 பிரதேச செயலகங்களுக்குரிய ரூபா 1,084,399,860 பெறுமதியான 2,608 செயற்றிட்டங்கள் குழு விதந்துரைகள் இன்றி அங்கீகரிக்கப்பட்டிருந்த சங்கங்களுக்கு வழங்கப்பட்டிருந்தன.

(vi) பாணதுறை பிரதேச செயலகத்தினால் செயற்திட்டங்களை செயற்படுத்தும் போது அரச கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 2.14.1 வழிகாட்டலின் பிரகாரம் ரூபா 2 மில்லியனை விஞ்சிய செயற்திட்டங்களுக்காக திறந்த கேள்விக்கு இடமளிப்பதற்குப் பதிலாக செயற்திட்டங்கள் பகுதிகளாக பிரிக்கப்பட்டு சமூக அடிப்படையிலான சங்கங்களுக்கு வழங்கப்பட்டிருந்தன.

(vii) அமைச்சின் நிதிஏற்பாடுகளின் மூலம் உள்ளூராட்சி மன்ற மற்றும் மாகாண சபைகள் அமைச்சினால் 77 உள்ளூராட்சி மன்றங்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு ரூபா 44,347,882 பெறுமதியான 40,056 கல்வனைஸ் குழாய்கள் கொள்வனவின் போது அக்கொள்வனவு 06 பகுதி பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு அவ்வப்போது கொள்வனவு செய்தமையால் அரச கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 4.1 மற்றும் 4.4 வழிகாட்டல்களுக்கு புறம்பாக நடவடிக்கை எடுத்திருந்ததுடன், அதனால் மொத்த குழாய்களுக்கும் ஒரே தடவையில் கேள்வி கோரப்படாததால், பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்த விலை நன்மை இழக்கப்பட்டிருந்தது.

(viii) சந்தை விலை ஒப்பீட்டு முறைமை பின்பற்றப்படும் போது திணைக்களத்தின் கொள்வனவுக் குழுவின் அதிகார எல்லை ரூபா 10 மில்லியனாக இருந்த போதிலும், அந்த எல்லை 3 சந்தர்ப்பங்களின் போது ரூபா 76.997 மில்லியன் கொள்வனவு திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்தின் கொள்வனவுக் குழு அங்கீகாரத்தின் பேரில் நிறைவேற்றப்பட்டிருந்தது.

(ix) கேள்வி கோரும் போது முத்திரையிடப்பட்ட கூறுவிலைகள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்தினால் 12 சந்தர்ப்பங்களின் போது ரூபா 138.305 மில்லியனான கொள்வனவுகளின் போது முத்திரையிடப்பட்ட கூறுவிலைகளைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(x) முதலாவது ஒப்பந்தத்தை வழங்கிய திகதியிலிருந்து 06 மாதங்களுக்குள் மீண்டும் கட்டளை மேற்கொள்ளப்பட்டிருந்தால் அது ஆரம்ப ஒப்பந்தத்தின் 50 சதவீதத்திற்கு மேற்படக்கூடாத போதிலும், இரண்டாவது கட்டத்தில் 6,840 கல்வனைஸ் குழாய்களுக்காக விலை

கோரப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டதன் பின்னர் மூன்றாவது கட்டத்தின் போது அக்கூறுவிலையை அடிப்படையாகக் கொண்டு ரூபா 9.4 மில்லியன் பெறுமதியான 8,504 குழாய்கள் அல்லது 124 சதவீதம் வரை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(xi) கேள்வி திறக்கும் சந்தர்ப்பத்திற்கு கேள்விதாரர்கள் அல்லது வருகை தந்துள்ள அவர்களின் பிரதிநிதிகளை பங்குபெறச் செய்து அவர்கள் முன்னிலையில் கேள்வி திறக்கப்பட வேண்டிய போதிலும் 08 சந்தர்ப்பங்களின் போது ரூபா 69.1 மில்லியன் பெறுமதியான கொள்வனவின் போது கேள்விதாரர்களை பங்குபெறச் செய்து கேள்வி திறக்கப்பட்டதாக உறுதிப்படுத்தப்படவில்லை.

(xii) தேசத்திற்கு மகுடம் செயற்திட்டத்திற்காக கேகாலை மாவட்ட செயலகத்தின் மேற்பார்வையின் கீழ் ரூபா 24,440,263 செலவில் துத்திரிப்பிட்டிய பஸ் நிலையத்தை நிர்மாணிப்பதற்கும் ரூபா 13,029,836 செலவில் திப்பிட்டிய வாரச்சந்தையை நிர்மாணிப்பதற்கும் அரச கூட்டுத்தாபனமொன்றுடன் உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. இச்செயற்திட்டங்களின் மதிப்பீடு மற்றும் மேற்பார்வை போன்ற அனைத்து நடவடிக்கைகளும் அரசின் கொள்வனவு செயற்பாடில்லாது கையளிக்கப்பட்டிருந்ததுடன், இந்நிறுவனத்தினாலும் கொள்வனவுச் செயற்பாடொன்றில்லாது முறைப்படி இயலுமைச் சான்றிதழொன்று பெற்றுக்கொள்ளாது பிரதேசத்தில் வசிக்கும் ஒருவருக்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது.

(xiii) கேகாலை மாவட்டத்தின் துத்திரிப்பிட்டிய பஸ் நிலையத்தை நிர்மாணிப்பதற்காக 2014 ஏப்ரல் 10 ஆந் திகதி ஒப்பந்தகாரருக்கு ஆரம்ப முற்பணமாக ஒப்பந்த தொகையில் 20 சதவீதமான ரூபா 4,192,155 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், இரண்டாவது மற்றும் மூன்றாவது பட்டியல்களிலிருந்து அதில் ரூபா 2,192,155 தொகையான முற்பணம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன் கணக்காய்வு திகதியான 2015 மார்ச் 19 ஆந் திகதி வரையிலும் எஞ்சிய முற்பணத் தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(xiv) கேகாலை மாவட்டத்தின் புலத்கொஹுபிட்டிய வாரச்சந்தை மற்றும் திப்பிட்டிய வாரச்சந்தை என்பவற்றை நிர்மாணிப்பதற்காக 20 சதவீத ஆரம்ப முற்பணமாக முறையே ரூபா 5,897,950 தொகையும் ரூபா 2,055,763 தொகையும் 2014 யூன் மாதத்தின் போது ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. கணக்காய்வு திகதியான 2015 மார்ச் 20 ஆந் திகதி அளவில் குறித்த நிர்மாணம் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்ததுடன், முறையே ரூபா 170,950 தொகை ரூபா 834,963 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஆரம்ப முற்பணத் தொகையில் ரூபா 5,727,000 தொகையும் ரூபா 1,220,800 தொகையும் ஒப்பந்தகாரரிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்தது.

(xv) கிளிநொச்சி மாவட்ட செயலகத்தினால் அரச கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 5.4.4 வழிகாட்டலுக்கு முரணாக முறையான பிணைப்பொறுப்பொன்று பெற்றுக்கொள்ளாமல் 21 நிர்மாணங்களுக்காக வேலை ஆரம்பித்தல் முற்பணமாக ரூபா 6,735,763 செலுத்தப்பட்டிருந்தது.

**(ஆ) அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

-----------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) படஹிர ரன் அருண மூலம் மேல் மாகாணத்தில் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தி செயற்திட்டங்களின் மதிப்பீட்டிற்காக ஸ்தாபிக்கப்பட்ட நிலையான குழுவிற்கும் அதன் உப குழுக்களில் பங்குபற்றும் படியாக அந்த அங்கத்தவர்களுக்கு 2014 மற்றும் 2015 ஜனவரி மாதத்தின் போது ரூபா 806,516 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அக்கொடுப்பனவிற்காக 2013 ஜனவரி 17 ஆந் திகதிய 03/2013 ஆம் இலக்க நிர்மாண பொறியியல் சேவைகள் வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் தொடர்பான அமைச்சிடமிருந்து அதாவது இந்த அமைச்சிற்குரித்தல்லாத அமைச்சரவை திருத்தமொன்றை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) திருகோணமலை மாவட்டத்தில் யானை, மனித மோதல்களைக் குறைக்கும் நோக்கில் ரூபா 24,782,878 தொகையான மதிப்பீட்டு பெறுமதியிலான மின்சார யானை வேலி நிர்மாண ஒப்பந்தம் நகர மற்றும் கடவத் சதர பிரதேச செயலகத்தினால் ரூபா ஒரு மில்லியனை விஞ்சாத வகையில் 18 பகுதிகளுக்கு பிரிக்கப்பட்டு கிராம சமூக அடிப்படையிலான சங்கங்களுக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் இறுதியில் அனைத்து ஒப்பந்தங்களும் ஒரே உப ஒப்பந்தகாரரொருவரால் நிறைவேற்றப்பட்டிருந்தது. 2014 ஆம் ஆண்டின் போது அதற்காக ரூபா 9,725,177 செலுத்தப்பட்டிருந்தது. இந்த யானை வேலியை நிர்மாணிப்பதற்காக வன பாதுகாப்பு திணைக்களத்தினால் 2014 ஆகஸ்ட் மாதத்தின் போது வழங்கப்பட்ட அங்கீகாரம் 2014 செப்தம்பர் மாதத்தின் போது இரத்துச் செய்யப்பட்டமையால் செலுத்தப்பட்ட தொகைக்கு சமமாக வழங்குனரால் பொருட்கள் வேலைத்தளத்திற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் அப்பொருட்கள் 2015 ஒக்தோபர் மாதம் வரையில் விளைவற்றுக் காணப்பட்டன.

(iii) 2014 ஆம் ஆண்டிற்காக திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் அங்கீகரிக்கப்படாத திவிநெகும நிவாரண உதவி நலனாளிகளின் வீடுகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டமாக செயற்படுத்தப்பட்டிருந்த ‘‘இசுறுமத் நிவஹனக்’’ நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் திவிநெகும சமூக வங்கி சங்கங்களின் நிதியைப் பயன்படுத்தி நிவாரண உதவி பெறும் 1,197,111 குடும்பங்களுக்கு ஒரு குடும்பத்திற்கு ரூபா 2,500 வீதம் 2,992,777,500 தொகை செலுத்தப்பட்டிருந்தது.
இது தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

- ஒரு குடும்பத்திற்கு ரூபா 10,000 வீதம் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்த மொத்த நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 15 பில்லியன் செலவிடுவதற்கு எதிர்ப்பார்க்கப்பட்ட போதிலும் நிகழ்ச்சித்திட்டத்தினைச் செயற்படுத்துவதற்காக பணிப்பாளர் நாயகத்திற்கு வரிசை அமைச்சிலிருந்தோ அல்லது திறைசேரியிடமிருந்தோ அதிகாரம் கிடைத்திருக்கவில்லை.

- இந் நிகழ்ச்சித்திட்டத்தினை செயற்படுத்துவதற்கு முன்னர் தேவையான நிதி ஏற்பாட்டை திட்டமிட்டுக் கொள்ளாமல் இருந்ததுடன் செலவினத்தை மேற்கொள்வதற்காக பொது திறைசேரியின் முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப் பட்டிருக்கவில்லை.

- குறித்த நலனாலிகள் எண்ணிக்கைக்கு மாத்திரம் உரித்தாகும் இந்நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக நாட்டின் மொத்த மக்களையும் அறிவூட்டுவதற்காக விளம்பரப்படுத்துவதற்காக ரூபா 997,476 தொகை செலவு செய்யப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக 2014 நவெம்பர் 22 ஆந் திகதி PRE/43 ஆம் இலக்க தேர்தல்கள் ஆணையாளரின் கடிதத்தின் பிரகாரம் ஜனாதிபதி தேர்தல் காலத்தின் போது அரச சொத்துக்களை கட்சி/அபேட்சகர்களை மேம்படுத்துவதற்கு பயன்படுத்த கூடாதென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதற்கு முரணாக ஒரு அபேட்சகரின் புகைப்படத்தை உள்ளடக்கிய அறிவித்தல் அச்சீட்டு ஊடகங்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்தன.

- ஒட்டுமொத்த நிகழ்ச்சித்திட்டத்தின் மேற்பார்வை, செயன்முன்னேற்றத்தை அறிக்கையிடுதல் மற்றும் பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய போதிலும் 2015 மார்ச் மாதம் வரையிலும் நிகழ்ச்சித்திட்டத்தின் செயன்முன்னேற்றம் அறிக்கையிடப்படாதிருந்ததுடன் ரூபா 3 மில்லியனுக்கு அண்மித்த பணம் செலவு செய்யப்பட்டிருந்த இந்நிகழ்ச்சித்திட்டம் முழுமையாக நிறுத்தப்பட்டிருந்தது.

(iv) அமைச்சின் உள்ளக சுற்றறிக்கை இலக்க 01/2012 இன் மூலம் செலவிடப்பட்ட மொத்த தொகையில் 2 சதவீதத்தை நிர்வாக செலவினமாக நிறுவனத்திற்கு நிறுத்தி வைப்பதற்கு முடியும் என தீர்மானிக்கப்பட்டிருக்கையில் கண்டி மாவட்ட செயலகத்திற்கு உரித்தான மொத்த செலவின அடிப்படையில் நிர்வாக செலவினம் ரூபா 9,477,392 இற்கு பதிலாக ரூபா 12,033,027 தொகை தலைப்பு 105 இன் கீழ் மாவட்ட செயலகத்தினால் செலவிடப்பட்டமையால் செலவிடக்கூடிய நிர்வாக செலவின எல்லையை விஞ்சி ரூபா 25,555,635 தொகை செலவிடப்பட்டிருந்தது.

## 3.16 நட்டங்களும் இழப்புகளும்

தெரிவுக் கணக்காய்வு பிரசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட நட்டங்கள் மற்றும் இழப்புகள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) அமைச்சினால் ரூபா 1,014,400 பெறுமதியான விமான பயணச்சீட்டுக்கள் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் வெவ்வேறு காரணங்களின் அடிப்படையில் வெளிநாட்டு பிரயாணங்கள் இரத்துச் செய்யப்பட்டிருந்தன. குறித்த கொடுப்பனவு செய்யப்பட்ட விமான டிக்கட்களுக்காக ரூபா 858,860 பெறுமதியான விமான பிரயாணச் சீட்டுக்கள் ஈடுசெய்யப்பட்டிருந்த போதிலும் எஞ்சிய ரூபா 155,540 தொகை 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் மீள அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 தேசத்திற்கு மகுடம் கண்காட்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் செயன் முன்னேற்றத்தை அமைச்சரவைக்கு தெரியப்படுத்துவதற்காக 36 பக்கங்களைக் கொண்ட 150 புத்தகங்கள் ரூபா

894,600 செலவு செய்து தனியார் கம்பனியொன்றில் அச்சிடப்பட்டிருந்தன. ஒரு புத்தகத்தினை அச்சிடுவதற்கு ரூபா 5,964 கிரயமாக இருந்தமையால் கணக்காய்வினால் குறித்த புத்தகத்தின் மாதிரிக்கு இணங்க கூறுவிலை சமர்ப்பித்த நிறுவனம் உட்பட பல நிறுவனங்களிடமிருந்து கூறுவிலை கோரப்பட்டதுடன் அங்கு ஒரு அலகிற்கு அச்சீட்டுக் கிரயமாக ரூபா 1,400 முதல் 1,650 வரையான விலகல் பெறுமதி சமர்ப்பிக்கப்பட்டது. சந்தையில் அச்சீட்டு கிரயம் தொடர்பாக தெளிவில்லாமல் செயற்பட்டமையால் அரசாங்கத்திற்கு ரூபா 600,000 இனை விஞ்சிய நட்டம் ஏற்பட்டிருந்தது.

(இ) ஹங்குராங்கெத்த பிரதேச செயலகப் பிரிவின் திவிநெகும தலைமையகத்துடன் இணைந்த மகுருப்ப சமுர்த்தி வங்கி மற்றும் மஹா சங்கம் என்பவற்றிற்கிடையே 2001 ஆகஸ்ட் 09 திகதி ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் 05 நபர்களுக்கு விற்பனை செயற்திட்டமொன்றுக்கு ரூபா ஒரு இலட்சம் வீதம் ரூபா 5 இலட்சம் கடன் வழங்கப்பட்டிருந்தது. இதற்காக நபர்களுடன் உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்படாமல் இருந்ததுடன் குறித்த கடன்தொகை 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்தினால் (சமுர்த்தி அதிகாரசபை) ஹங்குராங்கெத்த பிரதேச செயலகப் பிரிவிற்கு வழங்கப்பட்டிருந்த 2011-2013 ஆம் ஆண்டிலிருந்து இருந்து வரும் ரூபா 865,658 கடன் மீதியும் 03 சமூக அடிப்படையிலான வங்கிகளின் கீழ் 2014 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட ரூபா 923,621 கடன் மீதியும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(உ) பிரதி அமைச்சரால் பயன்படுத்தப்பட்ட ஜீப் வண்டி 2013 மே 21 ஆந் திகதி திடீர் விபத்திற்குட்பட்டிருந்ததுடன், அதன் திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் AMW நிறுவனத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமையால் 2013 மே 21 ஆந் திகதி முதல் 2014 நவம்பர் 24 ஆந் திகதி வரை அதன் அண்மித்த செலவினமாக ரூபா 69,320 தொகை அந்நிறுவனத்திற்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) பிரதி அமைச்சரால் பயன்படுத்தப்பட்ட ஜீப் வண்டி 2013 மே 21 ஆந் திகதி திடீர் விபத்திற்குட்பட்டிருந்தமையால் ரூபா 18 மில்லியன் சந்தை பெறுமதியுடைய அவ்வண்டி நிறுத்தி வைக்கும் நிலைமைக்குட்பட்டிருந்தது. பின்னர் AMW நிறுவனத்துடன் பிரதி அமைச்சர் நடாத்திய கலந்துரையாடலின் பின்னர் அந்நிறுவனத்தினால் வண்டியை திருத்தியமைப்பதற்காக ரூபா 7,729,023 ஆன மதிப்பீடொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், வண்டியின் காப்புறுதி முகவர் நிறுவனத்துடன் இணக்கம் ஏற்படாததன் காரணமாக 02 வருடத்திற்கு அண்மித்து காலமாக வண்டி திருத்தியமைக்கப்படாமலோ அல்லது முழுமையான நட்டத்தின் அடிப்படையில் காப்புறுதி இழப்பீட்டினை பெற்றுக்கொள்ளப்படாதிருந்தமையால் அரசிற்கு நட்டம் ஏற்பட்டிருந்தது.

(எ) பதுளை மாவட்டத்தின் பிரதேச செயலகப் பிரிவின் அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக மதிப்பீடு தயாரிக்கும் போது சரியான விலை மற்றும் அளவுகளைப் பயன்படுத்தாமல் தவறான கணிப்பீடு மற்றும் தவறான கிரயம் என்பன உள்ளடக்கப்பட்டமையால் 2014 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்டிருந்த 31 அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக ஒப்பந்தகாரர்களுக்கு ரூபா 1,178,117 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஏ) 2014 மார்ச் 05 ஆந் திகதி இரத்தினபுரி புதிய நகர விளையாட்டரங்கில் நடைபெற்ற மாவட்ட மட்டத்தில் அறிவுறுத்தும் கூட்டங்களுக்குத் தேவையான தகர மேவுகை உட்பட ஏனைய உபகரணங்களை ரூபா 1,323,300 தொகைக்கு இரத்தினபரி பிரதேசத்தில் பெற்றுக்கொள்ள இயலுமான

போதிலும் வேறொரு நிறுவனமொன்றுக்கு ரூபா 1,936,650 தொகை செலுத்தியமையால் அரசிற்கு ரூபா 613,350 நட்டம் ஏற்பட்டிருந்தது.

(ஐ) கிளிநொச்சி மாவட்டத்தின் கரச்சி பிரதேச செயலகப் பிரிவில் கால்நடை வளர்ப்பினை ஊக்குவிக்கும் செயற்திட்டமொன்றாக கால்நடை ஒன்று ரூபா 50,000 வீதம் 206 கால்நடைகளுக்கு ரூபா 10,300,000 தொகை செலவு செய்து கொள்வனவு செய்யப்பட்டு 206 நலனாளிகளுக்கு இடையே பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. குறித்த கொள்வனவிற்காக வழங்குனர் நிறுவனத்துடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்படாமல் இருந்ததுடன் பௌதீக பரிசோதனையின் போது குறித்த கால்நடைகளது சந்தைப்பெறுமதி ரூபா 35,000 ஆக இருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் 206 கால்நடைகளுக்கு ரூபா 3,090,000 கூடுதலாக செலவிடப்பட்டிருந்தது.

(ஒ) கிளிநொச்சி மாவட்டத்தின் கரச்சி பிரதேச செயலகப் பிரிவில் ஒரு லீற்றர் குடி நீரை ரூபா 1.00 வீதம் வழங்கக்கூடிய இயலுமை கரச்சி பிரதேச சபைக்கு உள்ள போதும் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தினால் தனியார் நிறுவனமொன்றிடமிருந்து ஒரு லீற்றர் ரூபா 3.00 வீதம் நீர் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இதனால் 07 சந்தர்ப்பங்களில் நீருக்காக ரூபா 238,000 தொகை கூடுதலாக குறித்த வழங்குனர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது.

## 3.17 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

தெரிவுக் கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட சிக்கனமற்ற விதத்தில் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

(அ) அமைச்சின் இருப்பு முகாமைத்துவத்திற்காக 2012 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 145,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட மென் பொருள் முறைமை மூலம் மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் சொத்துக்களை அறிக்கையிடுவது முக்கியமென தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த அமைச்சின் திட்டமிடல் பிரிவில் உள்ள சொத்துக்கள் குறித்த முறைமையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 ஆம் ஆண்டின் அபிவிருத்தி முன்மொழிவுகள் தொடர்பாக அரசியல் பிரதிநிதிகள் மற்றும் அரச உத்தியோகத்தர்கள் ஆகியோரை அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டமொன்று 2014 ஜனவரி 13 ஆந் திகதி முதல் 24 ஆந் திகதி வரை ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய அலுவல்கள் ஆராய்ச்சி மற்றும் பயிற்சித்தல் நிறுவனத்தில் நடாத்தப்பட்டிருந்தது. குறித்த வருகை பதிவேட்டின் பிரகாரம் பங்குபற்றிய நபர்களின் எண்ணிக்கை 4,279 ஆக இருந்த போதிலும் உபசரிப்பு நடவடிக்கைகளுக்காக கொள்வனவு செய்வதற்குரிய பதிவேட்டின் பிரகாரம் பங்குபற்றிய நபர்களின் எண்ணிக்கை 14,755 ஆக இருந்தது. வருகையை உறுதிப்படுத்தாத 10,476 நபர்களுக்கு ரூபா 1,838,688 உபசரிப்பு செலவினமாக செலவிடப்பட்டிருந்ததுடன் அது அரசிற்கு மேலதிகமான செலவாக அமைந்திருந்தது.

(இ) 2014 யூன் 09 ஆந் திகதி முதல் 18 ஆந் திகதி வரை தென் கொரியாவில் நடைபெற்ற பயிற்சி செயலமர்விற்காக எபிட்டவத்த கிராமத்தில் வசிக்கும் பட்டறைத் தொழிலில் ஈடுட்டுள்ள நபர்களை பங்கு பெறச்செய்யப்பட்டிருக்க வேண்டிய போதிலும் எபிட்டவத்த கிராமத்தில் வசிக்காத பட்டறைத் தொழிலில் ஈடுபடாத எஹலியகொடை பிரதேச சபையின் 2 உறுப்பினர்கள் பங்கு பெறச் செய்யப்பட்டிருந்தனர். செயற்திட்டத்திற்கு புறம்பாக நபர்கள் மேற்படி செயலமர்விற்கு பங்கு பெறச் செய்யப்பட்டதன் மூலம் குறித்த கைத்தொழிலில் ஈடுபட்டிருந்த நபர்களுக்கு அப்பயிற்சிக்கான சந்தர்ப்பங்கள் தவிர்க்கப்பட்டிருந்தன.

(ஈ) அமைச்சின் வாகனங்கள் இணைக்கப்பட்டிருந்த உத்தியோகத்தர்களுக்கு உரிய எரிபொருள் படிகளை மிகைத்து மேலதிக எரிபொருள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. ஓட்ட அட்டவணைகள் மற்றும் பெற்றுக்கொண்ட எரிபொருள் பரிசோதனையின் போது ஓட்டத்தில் ஈடுபடுத்த வேண்டிய தூரத்தை மிகைத்து மேலதிக எரிபொருள் மீள் நிரப்பப்பட்டிருந்தது. மேலதிக செயலாளருக்கும் பணிப்பாளருக்கும் ஓட்டத்தில் ஈடுபடுத்த வேண்டிய தூரத்தை மிகைத்து முறையே ரூபா 97,814 மற்றும் ரூபா 202,030 ஆன எரிபொருள் பட்டியல் மீள் நிரப்பப்பட்டிருந்தன.

(உ) திவிநெகும நிகழ்ச்சித்திட்டதிற்குரிய பயிரிடல் நடவடிக்கைகள் தொடர்பாக அறிவூட்டுவதற்காக 45,882,350 அறிவித்தல் பத்திரங்களை அச்சிடுவதற்காக விவசாய அமைச்சின் செயலாளரினால் அரசின் அழுத்தகருக்கு கட்டளையிடப்பட்டிருந்த போதிலும் கொடுப்பனவு உறுதிச்சீட்டின் பிரகாரம் 48,576,150 பத்திரங்களுக்கு ரூபா 53,201,597 அரச அழுத்தகருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) பதினாறு வகுப்புகளுக்குரிய 11,775,250 அச்சீட்டுப்பத்திரங்கள் மாத்திரம் தேவையாக இருந்த போதிலும் 14,244,500 அச்சீட்டு பத்திரங்கள் அச்சிடப்பட்டு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. கட்டளையிடப்படாத 2,469,250 இற்காக கூடுதலாக செலவாகிய ரூபா 3,073,850 தொகை அமைச்சினால் அரச அச்சக கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது.

(எ) களுத்துறை மாவட்டத்தின் பாணதுறை பிரதேச செயலகப் பிரிவின் கொரகான விளையாட்டரங்கை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 5,000,000 தொகை மதிப்பீட்டின் கீழ் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. விளையாட்டரங்கை நிரப்புவதற்காக அங்கீகரிக்கப்பட்ட வகையிலான குருணி மண் இடப்படாது கட்டிடங்களில் உடைத்து அகற்றிய கழிவுகளைக் கொண்டு அதனை நிரப்பியதால் செலவிடப்பட்ட ரூபா 4,021,734 தொகை பயனற்ற செலவாக இருந்தது.

(ஏ) 2014 மார்ச் 10 ஆந் திகதி நுவரெலியாவில் இடம் பெற்ற திவிநெகும விழாவின் மேடையை நிர்மாணிப்பதற்காக கொழும்பு மாவட்டத்தின் 4 நிறுவனங்களிடமிருந்து கூறுவிலை கோரப்பட்டு ரூபா 2,425,000 தொகை செலவு செய்யப்பட்டிருந்தது, பிரதேசத்தல் முன்னரே கூறுவிலை கோரபடாததால் மேடைப் போக்குவரத்துக் கட்டணமாக ரூபா 376,500 தொகையும் நுவரெலியா பிரதேசத்திற்கு தேவைப்படாத காற்று சீராக்கியொன்று வழங்கியமைக்காக ரூபா 79,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஐ) 2014 தேசத்திற்கு மகுடம் தேசிய கண்காட்சி மற்றும் அபிவிருத்தி செயற்திட்டங்களுக்குரிய செயன் முன்னேற்ற பத்தகங்களை அச்சிடும் பணி ரூபா 277,200 தொகைக்கு மேற்கொள்ள முடியுமாக இருக்கையில் குறித்த கொள்வனவுக் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு அங்கத்தவர்களின் மதிப்பீடு மற்றும் தீர்மானம் எடுத்தலின் பலவீனம் காரணமாக ஏ4 அளவிலான 32 பக்கங்களுடன் கூடிய ஒரு புத்தகத்திற்கு ரூபா 5,960 வீதம் 150 புத்தகங்களுக்கு ரூபா 894,000 தொகை செலவு செய்யப்பட்டு சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஒ) மாத்தறை மாவட்டத்தின் இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் சாரதிப்பயிற்சி வழங்குவதற்காக 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 3,387,900 நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதற்காக 491 பேர் தெரிவு செய்யப்பட்டு எழுத்துப் பரீட்சைக்கு முற்பணமாக ரூபா 1,693,950 செலுத்தப்பட்டிருந்தது. எஞ்சிய ரூபா 1,693,950 ஆனது 2015 மே மாதம் 15 ஆந் திகதி வரையிலும் நிதிப்பிரமாணங்கள் 136 மற்றும் 137 இற்கு முரணாக பொது

வைப்புக்கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. சாரதிப் பயிற்சிக்காக குறித்த நிறுவனத்திற்கு எழுத்துப்பரீட்சையில் சித்தியடைந்ததன் பின்னரே பணக்கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் பரீட்சைக்கு சமுகமளிக்காத 36 பேருக்கும் எழுத்துப்பரீட்சையில் சித்தியடையாத 42 பேருக்கும் ரூபா 269,100 தொகை சாரதி பயிற்சி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது.

(ஓ) மாத்தறை மாவட்டத்தின் சிறு ஏற்றுமதிப்பயிர்களை மேம்படுத்துவற்காக 16 பிரதேச செயலகங்களில் 1,637,030 கறுவாக் கன்றுகள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்ததுடன், கன்றுகளை போக்குவரத்துச் செய்வதற்கு ரூா 6,548,120 போக்குவரத்துக்காரர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. கன்றுகளை பகிர்ந்தளிப்பதற்காக வழங்குனர்களைத் தெரிவுசெய்யும் போது தேவையான மாதிரிகள் குறிப்பிடப்படாதிருந்ததுடன் பிரதேச செயலகத்திற்கு அண்மையில் வழங்குனர்கள் தெரிவு செய்யப்படாமையால் ஒரு கன்றுக்கு ரூபா 4.00 வீதம் அனைத்து இடங்களிலும் பகிர்ந்தளிப்பதற்காக சமமான கிரயம் ஏற்பட்டிருந்தது.

## 3.18 தீர்க்கப்பட்டிராத கணக்காய்வு ஐய வினாக்கள்

அமைச்சிற்குரித்தான கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த கணக்காய்வு பந்திகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட பற்றாக்குறைகள் தொடர்பாக அமைச்சினால் சரி செய்யப்படாத பந்திகளுக்கான தொடர்பு பின்வருமாறாகும்.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையுடன் தொடர்பு | | தொடர்புபடுத்தப்பட்ட விடயம் |
|---|---|---|
| **ஆண்டு** | **பந்தி இல.** | |
| 2011<br>2012<br>2013<br>2014 | எல்பி/எவ்/எம்ஈடீ/ மு.க/2011<br>எம்ஈடீ/அ.ஊ.மு.க/ஏகியு/18<br>வைஎஸ்/சீ/எம்ஈடீ/ அ.ஊ.மு.க/ 2013<br>வைஎஸ்/சீ/எம்ஈடீ/ அ.ஊ.மு.க/ 2014 | • வெளிநாட்டு லீவில் வெளிநாட்டிற்குச் சென்றிருந்த இரு உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 1,076,581 தொகையான இடர் மற்றும் ஆதனக் கடன் மற்றும் இதற்குரித்தான வட்டி அறவிடப்பட்டிருக்கவில்லை.<br>• இவ் ஆதனக் கடன் செலுத்தப்பட்ட ஆதனத்திற்குரித்தான அட்டோனி அதிகாரம் கையேற்கப்பட்டிருக்கவில்லை.<br>• உத்தியோகத்தர் வெளிநாட்டிற்குச் சென்றிருந்த காலத்தின் போது செலுத்தப்பட்ட சம்பளம் வெளிநாட்டுப் பயிற்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் மற்றும் கட்டாய சேவைக் காலத்தின் போது கடமையாற்றியிராமையால் செலுத்தப்பட வேண்டிய தண்டனைப் பணமான ரூபா 2,342,630 தொகை அறவிடப்பட்டிராமை.<br>• கடனை விடுவித்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்காமை. |
| 2011<br>2012<br>2013<br>2014 | எல்பி/எவ்/எம்ஈடீ/ மு.க/2011<br>எம்ஈடீ/அ.ஊ.மு.க/ஏகியு/18<br>வைஎஸ்/சீ/எம்ஈடீ/ அ.ஊ.மு.க/ 2013<br>வைஎஸ்/சீ/எம்ஈடீ/ அ.ஊ.மு.க/ 2014 | போலியான நியமனத்தில் அரச சேவைக்கு வந்திருந்த ஓர் உத்தியோகத்தரிடமிருந்து ரூபா 109,650 தொகையான கடன் மீதி அறவிடப்பட்டிராமை. |

| | | |
|---|---|---|
| 2011<br>2012<br>2013<br>2014 | எல்பி/எவ்/எம்ஈடீ/ மு.க/2011<br>எம்ஈடீ/அ.ஊ.மு.க/ஏகியு/18<br>வைஎஸ்/சீ/எம்ஈடீ/ அ.ஊ.மு.க/ 2013<br>வைஎஸ்/சீ/எம்ஈடீ/ அ.ஊ.மு.க/ 2014 | ஒரு உத்தியோகத்தரால் பெற்றுக்கொள்ளப் பட்டிருந்த ஆதனக் கடன் தொகை உரிய செயற்பாட்டிற்காகப் பயன்படுத்தப்பட்டிராமையால் ரூபா 332,331 தொகையான கடன் மீதி மரண பணிக்கொடையிலிருந்தும் அறவிடப்படாமை. |
| 2012<br>2013<br>2014 | எம்ஈடீ/அ.ஊ.மு.க/ஏகியு/18<br>வைஎஸ்/சீ/எம்ஈடீ/ அ.ஊ.மு.க/ 2013<br>வைஎஸ்/சீ/எம்ஈடீ/ அ.ஊ.மு.க/ 2014 | வேலை நீக்கத்திற்குள்ளான ஓர் உத்தியோகத்தரின் ஓய்வூதியப் பணிக்கொடையும் இரத்துச் செய்யப்பட்டிருந்தமையால் ரூபா 64,314 தொகையான கடன் மீதியை அறவிடப்படுவதற்கு முடியாதிருந்தமை. |
| 2012<br>2013<br>2014 | எம்ஈடீ/அ.ஊ.மு.க/ஏகியு/18<br>வைஎஸ்/சீ/எம்ஈடீ/ அ.ஊ.மு.க/ 2013<br>வைஎஸ்/சீ/எம்ஈடீ/ அ.ஊ.மு.க/ 2014 | அங்கீகாரமின்றி கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டச் செயலகங்கள் இரண்டாலும் 19 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 4,075,159 இற்கு மேற்பட்ட இரண்டு ஆண்டுச் சம்பளக் கடன் உரிய கடனாளிகளிடமிருந்து ஒரே தடவையில் அறவிடப்பட்டிராமை. |
| 2013 | 1.6(v) | 5 சதவீதம் மற்றும் 15 சதவீதப் படியான விசேட படிப்பணம், கடமை மேவுகை அடிப்படையில் வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்குப் பெற்றுக்கொள்ளப்பட முடியாத போதிலும் அமைச்சின் கீழ் செயற்படும் 3 வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்களில் 79 உத்தியோகத்தர்களுக்காக 2011 ஆம் ஆண்டு முதல் 2014 செப்தெம்பர் மாதம் வரையான காலப்பகுதிக்காக விசேட படிகளாக ரூபா 3,132,075 தொகை அவர்களது ஊதியத்துடன் செலுத்தப்பட்டிருந்தது. அத் தவறான கொடுப்பனவுகளை மேற்கொண்ட உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| 2013 | 1.6(iv) | சுற்றறிக்கைக் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு இணங்காத வகையில் அமைச்சின் 65 உத்தியோகத்தர்களுக்காக 2013 சனவரி முதல் 2014 செப்தெம்பர் வரை ரூபா 2,094,018 தொலைபேசிப் பட்டியல்கள் மீளளிக்கப்பட்டிருந்தன. |
| 2013 | 1.6(iv) | அத்தியாவசிய வாகனத் தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்வதற்காக குறித்த காலப்பகுதிக்காக வாகனம் குத்தகைக்குப் பெற்றுக் கொள்ளப்படுகையில் மாதாந்தம் ஒரு வாகனத்திற்கு குத்தகை வாடகையாக செலுத்தப்படக்கூடிய ஆகக் கூடுதலான தொகை ரூபா 40,000 தொகையான போதிலும் அமைச்சால் ரூபா 150,000 படி ஓர் வாகனம் வாடகைக்குப் பெற்றுக் கொள்ளப்பட்டு 2013 பெப்ரவரி 20 ஆம் திகதி முதல் திசெம்பர் 26 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்காக வாடகையாக ரூபா 1,057,334 கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது. |

## 3.19 முகாமைத்துவ நலிவுகள்

தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) திவிநெகும வாழ்வாதார மற்றும் வீட்டுக்கு வீடு கிராமத்திற்கு கிராமம் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் 2014 இன் கீழ் நுவரெலியா பிரதேச செயலகத்தின் 184 நபர்களுக்கு ரூபா 4,052,137 பெறுமதியான 18 செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்கு இனங்காணப்பட்டிருந்த போதிலும் 2015 ஒக்டோபர் 20 ஆந் திகதி வரை குறித்த பணம் திவிநெகும சமுதாய அடிப்படையிலான வங்கிகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

(ஆ) திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்தை ஆரம்பிக்கும் போது ஒன்றிணைக்கப்பட்ட சமுர்த்தி அதிகாரசபை தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் உடரட்ட அபிவிருத்தி அதிகாரசபை ஆகிய மூன்று நிறுவனங்களில் சேவையில் ஈடுபட்டிருந்தவர்கள் சுய விருப்பில் சேவையிலிருந்து விலகிய 23 மாவட்டங்களின் 826 உத்தியோகத்தர்களுக்கு 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் இழப்பீடு மற்றும் பணிக்கொடையாக ரூபா 833,237,615 அம்மாவட்டங்களின் திவிநெகும சமுதாய வங்கி சங்கங்களின் நிதியைப் பயன்படுத்தி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்தின் அப்பணம் சமுதாய சங்கங்களுக்கு மீள் நிரப்பிக் கொள்வதற்காக திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட எழுத்து மூல உறுதிப்படுத்தலின் பிரகாரம் இப்பணம் அந் நிதியத்தின் மூலம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2015 ஒக்டோபர் மாதம் வரையிலும் அப் பணம் மீள் நிரப்பப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே இக்கொடுப்பனவிற்காக திவிநெகும சமுதாய வங்கிச் சங்கங்களுக்குச் சொந்தமான நிலையான வைப்புக்களை பயன்படுத்தியமையால் அவ்வங்கிகளின் வட்டித்தொகை இழக்கப்பட்டும் இருந்தது.

(இ) ஹங்குரன்கெத்த பிரதேச செயலகப் பிரிவில் 2014 ஆம் ஆண்டில் சமுர்த்தி பெறுவோரின் சேமிப்பு வைப்புக்களுக்காக செலுத்தப்பட்ட வட்டித்தொகை சமுர்த்தி அதிகாரசபையிடமிருந்து மீள் நிரப்பப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செலுத்தப்பட்ட வட்டித் தொகையில் ரூபா 1,682,203 தொகை மீள் நிரப்பப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சமுர்த்தி அதிகாரசபையின் வங்கிச் சங்க 24 ஆம் இலக்க சுற்றறிக்கை கடிதத்தின் பிரகாரம் திரிய மாதா கணக்கு ஆரம்பித்து எதிர்ப்பார்த்த நோக்கங்கள் மற்றும் இலக்கு நிறைவேற்றப்பட வேண்டிய போதிலும் ஹங்குரன்கெத்த பிரதேச செயலகப் பிரிவில் காணப்பட்ட திரியமாதா கணக்கில் ரூபா 2,514,911 தொகை 2015 மார்ச் 31 ஆந் திகதி வரை செயற்பாடற்று காணப்பட்டது.

(உ) 10 ஹங்குரன்கெத்த சமுதாய அடிப்படை வங்கிகளில் ரூபா 18,821,457 பெறுமதியான பங்குப்பணம் மற்றும் வைப்புக்கள் 2015 ஒக்தோபர் 20 ஆந் திகதி வரையிலும் விளைவற்று காணப்பட்டன.

(ஊ) திவிநெகும அபிவிருத்தி திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் 2014 ஒக்தோபர் 30 ஆந் திகதிய 2014/11 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் ‘‘இசுருமத் நிவஹென’’ என்ற தலைப்பில் நுவரெலியா மாவட்டத்தில் 05 பிரதேச செயலக பிரிவுகளில் 25,883 திவிநெகும நலனாளிகளுக்கு திவிநெகும சமுதாய அடிப்படை வங்கிகளின் நிவாரண உதவியாளர்களின் சேமிப்புக் கணக்கின் மூலம் செலுத்தப்பட்ட ரூபா 64,707,500 தொகை 2015 ஜனவரி 30 ஆந் திகதி வரையிலும் மீள் நிரப்பப்படாதிருந்ததுடன் மேலும் 12,022 நலனாளிகளுக்காக செலுத்த வேண்டிய ரூபா 30,055,000 தொகையை கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.20 மனித வள முகாமைத்துவம்

**சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்காத நியமனங்கள்**

கீழே காட்டப்பட்டுள்ள சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்காத நியமனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2007 ஏப்ரல் 05 ஆம் திகதிய 33 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் அரசாங்க சேவையிலிருந்து உள்ளூராட்சி மன்றங்கள் உட்பட மாகாண சபை சேவையில், அரச கூட்டுத்தாபனம் மற்றும் நியதிச்சட்ட சபைகளுக்கு முழக் காலப்பகுதியில் செயற்திட்டங்களிற்காக விடுவிக்கப்படுகின்ற உத்தியோகத்தர்களின் சேவைக்காலம் 05 ஆண்டுகளை விஞ்சக்கூடாத போதிலும், அமைச்சின் கீழ் செயற்படுத்தப்பட்ட ‘‘உலக உணவு நிகழ்ச்சித்தட்டம்’’ செயற்திட்டத்தின் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவின் கடமைக்காக அரச சேவையிலிருந்து முழுநேரமாக விடுவிக்கப்பட்ட 12 உத்தியோகத்தர்களுக்கு 05 ஆண்டுகளை விஞ்சி சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், அதற்காக ஆரம்பச் சம்பளத்தின் 50 சதவீதமாக கணக்கிடப்பட்ட படிகளும் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2007 ஏப்ரல் 05 ஆம் திகதிய 33 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்திட்டமொன்றிற்கு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்படும் உத்தியோகத்தர்களின் சேவைக்காலம் ஆகக்கூடியது 03 வருடங்களாக இருக்க வேண்டிய போதிலும், உலக உணவு நிகழ்ச்சித்தட்டம்’’ செயற்திட்டத்தின் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவிற்காக 06 உத்தியோகத்தர்களும் ஒருகொடவத்த களஞ்சிய தொகுதியில் 15 உத்தியோகத்தர்களும் 03 ஆண்டுகளை விஞ்சி ஒப்பந்த அடிப்படையில் சேவைக்கு ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(இ) 2007 ஏப்ரல் 05 ஆம் திகதிய 33 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையில் செயற்திட்ட பதவிகள் வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன் அந்த ஒவ்வொரு வகுதிக்கும் ஆட்சேர்க்கப்பட வேண்டிய உத்தியோகத்தர்களிடம் இருக்க வேண்டிய ஆகக்குறைந்த தகைமை குறிப்பிடப்பட்டுள்ளன. உலக உணவு நிகழ்ச்சித்தட்டம்’’ செயற்திட்டத்தின் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவில் முழுநேர சேவைக்காக ஆட்சேர்க்கப்பட்ட உதவி செயற்திட்ட பணிப்பாளர் பதவியில் இரண்டு உத்தியோகத்தர்களுக்கு சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆகக்குறைந்த தகைமை மற்றும் அனுபவம் என்பன காணப்படவில்லை.

## 4. தலைப்பு 218 – சமுர்த்தி ஆணையாளர் நாயகத் திணைக்களம்

### 4.1 கணக்குகளைச் சமர்ப்பித்தல்

திணைக்களத்தினால் 2015 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் 218 தலைப்பிற்குரிய ஒதுக்கீட்டுக் கணக்கு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அக்கணக்கு 21 நாட்களுக்கு மேற்பட்ட தாமதத்தின் பின்னர் 2015 ஏப்ரல் 21 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 21801 ஆம் விடய அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று 2015 ஏப்ரல் 30 ஆந் திகதி அளவில் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அது 2015 யூன் 15 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.2 ஏடுகளும் பதிவேடுகளும் பேணப்படாமை

திணைக்களத்தால் பின்வரும் பதிவேடுகள் பேணப்பட்டிராததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையான முறையிலும் பேணப்பட்டிராமை தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணங்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (i) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | பதிவுப் பொருட் பதிவேடு, | நிதிப் பிரமாணம் 454(1) | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | இருப்புப் பதிவேடு | நிதிப் பிரமாணம் 751 மற்றும் 763 இன் பிரகாரம் | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | கணனி மற்றும் கணனி உதிரிப் பாகங்களின் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (v) | வாகனப் பதிவேடு | நிதிப் பிரமாணம் 802 மற்றும் நிதிப் பிரமாணம் 1647 (இ) இன் பிரகாரம் | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. |
| (vi) | கிடைக்கப்பெறும் காசோலைகள், காசுக் கட்டளைக்கான பதிவேடு | நிதிப் பிரமாணம் 451 | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (vii) | பிணைப் பதிவேடு | நிதிப் பிரமாணம் 891(1) | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (viii) | மின் உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ix) | கொள்வனவுக் குழுவினதும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினதும் வருகைப் பதிவேடு | அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 2.11.2 வழிகாட்டல் | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (x) | குழுக் கூட்ட அறிக்கை | அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 2.11.3(அ) வழிகாட்டி | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (xi) | கேள்வி கோரல் பதிவேடு | கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 5.2.1 வழிகாட்டி | பேணப்பட்டிருக்கவில்லை. |

## 4.3 கணக்காய்வு ஐயவினாக்களிற்கான பதிலளிப்பு

திணைக்களத்திற்கு மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட 2 கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் முன்னைய ஆண்டின் போது வழங்கப்பட்ட 4 கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் 2015 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிராததுடன் அவ் ஐயவினாக்களுக்குரிய கணிப்பிடப்படக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 46,051,770 ஆகக் காணப்பட்டது.

## 4.4 ஒதுக்கீட்டுக் கணக்கு

## 4.4 பாதீட்டு முரண்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒன்பது செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 4,800,000 தொகையான மொத்த தேறிய ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) ஆறு செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தால் ஏற்பாடு பயன்படுத்தப்பட்டதை அடுத்து மிகுதி அச் செலவின விடயங்களுக்குரித்தான தேறிய ஏற்பாட்டில் 10 சதவீதத்திலிருந்து 87 சதவீதம் வரைக்கிடைப்பட்ட வீச்சைக் கொண்டிருந்தது.

(இ) 2014 திசெம்பர் 01 ஆந் திகதியே 239/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தியில் 15 செலவின விடயங்களுக்குரிய ரூபா 8,560,000 கூட்டுத்தொகையான சேமிப்புக்களுக்கு குறிப்பிடப்பட்டிருந்த காரணங்கள் போதுமானதாக இருக்கவில்லை. அதன் பிரகாரம் சமுர்த்தி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தின் நிர்வாக மற்றும் நிதி நடவடிக்கைகள் திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்திற்கு உள்ளீர்க்கப்பட்டதன் காரணமாக இச்சேமிப்புக்கள் உருவாகியிருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், இது தொடர்பாக திறைசேரிப் பிரதிச் செயலாளரின் 2014 சனவரி 21 ஆந் திகதய பீடீ/ஆர்டீஎஸ்331/1/6 ஆம் இலக்க கடிதத்தின் ஆலோசனைகளின் பிரகாரம் சமுர்த்தி ஆணையாளர் நாயகத் திணைக்களம் மற்றும் திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்திற்கு உள்ளீர்க்கப்பட்ட ஏனைய நிறுவனங்களுக்குரிய ஏற்பாடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடுகளில் மீண்டெழும் மற்றும் மூலதன செலவினங்களை மேற்கொள்வதற்கு எதிர்பார்த்த செலவின விடயங்கள் தொடர்பான விபரங்கள் தேசிய பாதீட்டு திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.5 பொது வைப்புக் கணக்கு

02 ஆண்டுகள் கடந்த ரூபா 2,454,220,181 கூட்டுத்தொகையான வைப்பு மீதிகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.6 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.6.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.6.2 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆம் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2014 திசெம்பர் 30 ஆந் திகதி அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 4.6.3 உள்ளகக் கணக்காய்வு

நிதிப் பிரமாணம் 133 இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.6.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

2014 ஆம் ஆண்டின் போது 03 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தன.

### 4.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது கண்டறியப்பட்ட குறைபாடுகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

#### (அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்தல்

2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 02/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2014 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அவ் அறிக்கை 2015 மார்ச் 17 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அமைச்சினால் 2015 மே 31 ஆந் திகதி வரையிலும் அவ்வறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. இறுதியாக வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2013 ஆம் ஆண்டிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்தது.

#### (ஆ) வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்

திணைக்களத்தால் சில சொத்துக்கள் முறையற்ற விதத்தில் வெளித்தரப்பினருக்கு விடுவிக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. விபரங்கள் பின்வருமாறு.

| | சொத்து வகை | சொத்துக்களின் எண்ணிக்கை | சொத்துக்கள் வழங்கப்பட்ட நிறுவனம் | பெறுமதி | காலப்பகுதி |
|---|---|---|---|---|---|
| | ------------------ | ----------------------- | ------------------------------- | -------------- | ---------------- |
| (i) | மோட்டார் வாகனம் | 01 | தாவரவியல் பூங்கா மற்றும் பொது விநோத நடவடிக்கைகள் அமைச்சு | மதிப்பிடப்பட்டிருக்க வில்லை | 2014.04.17 முதல் |
| (ii) | மோட்டார் வாகனங்கள் | 03 | காணி பயன்பாடு கொள்கை திட்டமிடல் திணைக்களம் | மதிப்பிடப்பட்டிருக்க வில்லை | 2014.03.31 முதல் |
| (iii) | மோட்டார் வாகனங்கள் | 01 | தொலைத் தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சிற்கு தற்காலிகமாக கையளிக்கப்பட்டுள்ளது. | மதிப்பிடப்பட்டிருக்க வில்லை | - |

**(இ) வேறு நிறுவனத்திடமுள்ள சொத்துக்கள் முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்படல்**

வேறு நிறுவனத்திடமிருந்த சில சொத்துக்கள் முறையான அங்கீகாரமின்றி திணைக்களத்தினால் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டன. விபரங்கள் பின்வருமாறு

| சொத்து வகை | சொத்துக்கள் உரித்தான நிறுவனம் | எண்ணிக்கை | பெறுமதி |
|---|---|---|---|
| --------------- | -------------------------------------- | -------------------- | ------------------- |
| | | | **ரூபா** |
| மோட்டார் வாகனம் | நகர்ப்புற அபிவிருத்தி அபிவிருத்தி அமைச்சு | 01 | மதிப்பிடப்பட்டிருக்க வில்லை. |

**(இ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

திணைக்களத்தினால் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 வருடத்திற்கும் குறைந்த தீர்க்கப்படாத பொறுப்புக்கள் ரூபா 5,925,155 ஆக இருந்தது.

## 4.8 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமைகள்**

தெரிவுக் கணக்காய்வுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை** | | |
| (i) XII ஆம் அத்தியாயத்தின் 1.7 ஆம் பிரிவு | - | உத்தியோகத்தர்களின் விடுமுறைகளை பதிவு செய்வதற்காக பொது 190 மாதிரியிலான விடுமுறைப் பதிவேடொன்று பேணப்பட வேண்டிய போதிலும், சில பிராந்திய அலுவலகங்களில் விடுமுறைப் பதிவேடு பேணப்பட்டி ருக்கவில்லை. |
| (ii) XII ஆம் அத்தியாயத்தின் 1 மற்றும் 2 ஆம் பிரிவுகள் | - | கடமை நாட்களில் சேவைக்கு வருகை தராத உத்தியோகத்தர்களால் தமது மேற்பார்வை உத்தியோகத்தரின் ஊடாக கடமை அல்லது தனிப்பட்ட விடுமுறையை அங்கீகரித்துக் கொள்ள வேண்டிய போதிலும், அவ்வாறான அங்கீகாரமொன்று இல்லாமல் சேவைக்கு வருகை தந்திருக்கவில்லை. |
| (iii) XII ஆம் அத்தியாயத்தின் 3.2 ஆம் பந்தி | | கடமை நிலையத்திலிருந்து வெளியேறும் போது வெளிச் செல்லல் பதிவேட்டில் பதிவு செய்து உரிய மேற்பார்வை உத்தியோகத்தரினால் அங்கீகரித்துக் கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப் படாதிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. |
| (iv) XXIV ஆம் அத்தியாயத்தின் 4,5 ஆம் 4,6 ஆம் பிரிவுகள் | 191,402 | பதவி வறிதாக்கப்பட்ட மற்றும் வேலை இடைநிறுத்தத்திற்கு உட்பட்ட உத்தியோகத்தர்களின் நிலுவைக் கடன் மீதி தொடர்பான ஏற்பாடுகளின் பிரகாரம் பிணையாளிகளிடம் இருந்து அறவிடுவதற்கோ அல்லது அது தொடர்பாக சட்டமா அதிபர்களிடம் ஆலோசனைகள் பெற்றுக்கொள்ளவோ நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| **(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்** | | |
| நிதிப் பிரமாணம் 110 | - | முறைப்படி இழப்புகள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| **(இ) பொது நிர்வாகச் சுற்றறிக்கை** | | |
| 1990 ஒக்டோபர் 10 ஆம் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றறிக்கை | - | சுற்றறிக்கையின் பிரகாரம் ஒவ்வொரு 6 மாதங்களுக்கு ஒரு தடவையும் திணைக்களத்தின் சகல வாகனங்களினதும் எரிபொருள் நுகர்வு பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை |

**(ஈ) தேசிய பாதீட்டு சுற்றறிக்கை**

| | | |
|---|---|---|
| 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 1.1.7 பந்தி | 346,092<br><br>646,682 | எவரேனும் உத்தியோகத்தரொருவர் இடமாற்றம் பெற்றுச்சென்று 03 மாதங்கள் மற்றும் இடமாற்றம் பெற்று வந்த 02 மாதங்கள் கடப்பதற்கு முன்னர் கடன் தீர்த்து வைக்கப்பட வைக்க வேண்டிய போதிலும், இடமாற்றம் பெற்றுச் சென்ற 04 உத்தியோத்தர் களிடமிருந்து ரூபா 346,092 தொகையும் இடமாற்றம் பெற்று வந்த 04 உத்தியோத்தர்களிடமிருந்து ரூபா 646,682 கூட்டுத்தொகையான கடன் மீதிகள் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்வு செய்யப்பட்டிருக்க வில்லை. |

**(உ) சமுர்த்தி படிப்பணச் சுற்றறிக்கை**

2013 சனவரி 10 ஆம் திகதிய 2013/1 ஆம் இலக்க சுற்றறிக்கையின்

| | | |
|---|---|---|
| (i) 2.1(ii) ஆம் பந்தி | 5,074,810 | ஒவ்வொரு மாதத்திலும் ரூபா 10 ஐ கழித்து குறித்த மாதத்தின் 20 ஆம் திகதிக்கு முன்னர் வீடமைப்பு அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு நிதியத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய போதிலும் தெரிவுக் கணக்காய்வின் போது ஒரு பிரதேச செயலகம் 2 மாதங்களை விட தாமதித்து அனுப்பிவைத்திருந்தது. |
| (ii) 2.1 iii, iv மற்றும் 5.3 ஆம் பந்திகள் | 18,160,555 | ஒவ்வொரு மாதமும் கட்டாய சேமிப்புக்கள் மற்றும் நலனாளிகளுக்குச் செலுத்த வேண்டிய தொகை ஒரே தடவையில் நலனாளிகளின் கணக்குகளுக்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், 03 வங்கி சங்கங்களினால் 03 நாட்கள் முதல் 14 நாட்கள் வரையான காலதாமதத்தின் பின்னர் அப்பணம் செலவு வைக்கப்பட்டிருந்தது. |
| (iii) 4.2 ஆம் பந்தி | 15,065,190 | சமுர்த்தி நலனாளிகளுக்குரிய காசோலைகள் சமுர்த்தி வங்கிச் சங்கங்களுக்கு ஒவ்வொரு மாதத்தின் 25 ஆந் திகதி முன்னர் அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும் 02 நாட்கள் முதல் 48 நாட்கள் வரையான கால தாமதத்தின் பின்னர் அக்காசோலைகள் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. |

## 4.9 சர்ச்சைச்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைச்குரிய தன்மையிலானதாக இருந்தன. தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவ்வாறான சில கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) சமுர்த்தி நலனாளிகளுக்கு வழங்கப்படும் நிவாரண உதவிகளை உரிய வங்கிக் கணக்குகளில் செலவு வைக்கப்படும் போது குறித்த பிரிவிற்குப் பொறுப்பான கிராம உத்தியோகத்தர்கள் மூலம் பிரதேச செயலாளருக்கு அறிவிப்பதில் தாமதம் காரணமாக தெரிவுப் பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட 04 வங்கிச் சங்கங்களுக்குரிய 7 நலனாளிகள் மரணமடைந்திருந்த போதும் நானாளிகளின் கணக்குகளுக்கு ரூபா 63,000 தொகை வைப்புச் செய்யப்பட்டிருந்தன.

(ஆ) முதியோர் இல்லங்களில் வசித்து வரும் நலனாளிகளுக்கு அவர்களின் தேவைப்பாட்டிற்காக பயன்படுத்துவதற்கு, உரிய முதியோர் இல்லத்தின் காப்பாளரின் பெயரில் ஆரம்பிக்கப்பட்ட கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்த ரூபா 326,187 தொகை நீண்டகாலமாக பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் இருந்ததுடன், அநேகமான நலனாளிகள் அதுவரை மரணமடைந்திருந்தனர்.

## 4.10 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

### அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

நலனாளிகள் இனங்காண்பதற்கு முடியாமை அடிப்படையில் சேமிக்கப்படும் பணம் வேறாக அது பொதுத் திறைசேரிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும், சமுர்த்தி பணிப்பாளர் நாயகத்தின் அல்லது சமுர்த்தி ஆணையாளர் நாயகத்தின் எவ்வித அங்கீகாரமொன்றில்லாமல் வங்கிச் சங்கமொன்றில் காணப்பட்ட ரூபா 390,600 தொகையான அறவிடமுடியாக் கடனைப் பதிவழிப்பதற்காக அப்பணம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 4.11 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர்

சமுர்த்தி ஆணையாளர் நாயகத் திணைக்களம் மற்றும் கிராம அபிவிருத்தி ஆராய்ச்சி நிறுவகம், திவிநெகும அபிவிருத்தி திணைக்களம் என்பவற்றைத் தாபிக்கும் போது அதில் ஒன்றிணைக்கப்பட்டமையால் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அமைப்பு வரைபடம் மற்றும் பதவியணியினரும் திவிநெகும திணைக்களத்திற்கு ஒன்றிணைப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தன.

## 5. தலைப்பு 281 – கமநல அபிவிருத்தி திணைக்களம்

## 5.1 கணக்குகளைச் சமர்ப்பித்தல்

திணைக்களத்தினால் 2015 மார்ச் 31 ஆந் திகதி அளவில் கீழே காட்டப்பட்டுள்ள கமத்தொழில் சேவை நிலையங்களின் கணக்குகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அக்கணக்குகுள் 2015 யூன் 15 ஆந் திகதி வரை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| ஆண்டு | சமர்ப்பிக்கப்படாத கணக்குகளின் எண்ணிக்கை |
|---|---|
| 2006 | 27 |
| 2007 | 28 |
| 2008 | 28 |
| 2009 | 47 |
| 2010 | 41 |
| 2011 | 35 |
| 2012 | 57 |
| 2013 | 82 |
| 2014 | 270 |

### 5.2 ஏடுகளும் பதிவேடுகளும் பேணப்படாமை

திணைக்களத்தால் பின்வரும் பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிராமை தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| பதிவேட்டு வகை | உரிய பிரமாணங்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| இழப்புகள் மற்றும் நட்டங்கள் | நிதிப் பிரமாணம் 110 | நாளது வரையாக்கப் பட்டிருக்கவில்லை. |
| நிலையான சொத்துக்கள் | நிதிப் பிரமாணம் 502(2) | நாளது வரையாக்கப் பட்டிருக்கவில்லை. |
| அடியிதழ் சேர் பதிவேடு | நிதிப் பிரமாணம் 341(1) | நாளது வரையாக்கப் பட்டிருக்கவில்லை. |

### 5.3 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### 5.3.1 பாதீட்டு முரண்

எட்டு செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தினால் ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்டதன் பின்னர் எஞ்சியிருந்தவை அச் செலவின விடயங்களுக்குரித்தான தேறிய ஏற்பாட்டின் 10 சதவீதத்திற்கும் 62 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

#### 5.3.2 பொது வைப்புக் கணக்கு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 6000/0000/00/0006/0051/000 மற்றும் 6000/0000/00/0051/0136/000 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்குகளின் மீதிகள் திணைக்களப் பதிவேடுகள் மற்றும் திறைசேரிப் பதிவேடுகள் என்பவற்றின் பிரகாரம் முறையே ரூபா 651,767 ஆலும் ரூபா 489,597 ஆலும் இணங்கவில்லை.

அவ்வேறுபாடு 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ஒப்பிடப்பட்டு சீராக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 6000/0000/00/0015/0136/000 ஆம் இலக்க மற்றும் 6000/0000/00/0002/0010/000 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்குகளில் மீளாய்வாண்டின் இறுதி காணப்பட்ட 2 ஆண்டுகளை மிகைத்த தீர்வு செய்யப்படாதிருந்த முறையே ரூபா 304,009 தொகையும் ரூபா 17,500 தொகையுமான வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

28101 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்று தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் அத் திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 21,464,717 ஆகக் காணப்பட்டதுடன், அந் நிலுவை மீதிகள் 01 ஆண்டு முதல் 05 ஆண்டுகள் வரையான கால கடந்திருந்த போதிலும் அந்நிலுவை மீதியை அறவிடுவது தொடர்பான பின்தொடர் நடவடிக்கை பலவீனமான நிலைமையில் காணப்பட்டது.

(ஆ) தனிப்பட்ட மீதி வகைப்படுத்தல் பொழிப்பின் கூட்டுத்தொகை கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதியுடன் இணக்கம் செய்த போது ரூபா 1,482,667 தொகையான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டதுடன், இவ்வேறுபாட்டினுள் 2007 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தனிப்பட்ட மீதிகள் பொழிப்பின் வேறுபாடான ரூபா 364,515 தொகையும் இனங்காணப்படாத வரவு மீதியான ரூபா 1,986,920 தொகையும் இனங்காணப்படாத செலவு மீதியான ரூபா 868,768 தொகையும் உள்ளடக்கப்பட்டிருந்ததாக மேலும் அவதானிக்கப்பட்டது.

(இ) தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாத ஓய்வுபெற்ற, வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட மற்றும் வேலை முடிவுறுத்தப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து 2014 திசெம்பர் 31 உள்ளவாறான கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 16,631,406 ஆக இருந்ததுடன் அம்மீதியில் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 5,960,267 ஆன கடன் மீதி காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) பிரதேச சபைகளுக்கு போட்டியிட்டு தெரிவாகிய மூன்று உறுப்பினர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 30,740 ஆன கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மாகாண சபை உத்தியோகத்தர்களாக உள்ளீர்க்கப்பட்ட கமநல சேவை உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 486,944 ஆன கடன் மீதி 06 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வருவதுடன், அம்மீதியை தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களினதும் இடமாற்றம் பெற்று வந்த உத்தியோகத்தர்களினதும் கடன் மீதி முறையே ரூபா 3,415,748 தொகையும் ரூபா 20,273 தொகையுமாக இருந்தன. இடமாற்றம் பெற்றுச்

சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதி 06 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வருவதாக காணப்பட்டது. அம்மீதிகள் தொடர்பாக 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்வு செய்வதற்கு தவறியிருந்தது.

(எ) 2007, 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளின் அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 374,380 தொகையான இனங்காணப்படாத கடன்பட்டோர் மீதிகள் இனங்காணப்படாமல் அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

## 5.6 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 5.6.1 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தால் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்**

கீழே விபரிக்கப்பட்டவாறு சில சொத்துக்கள் விளைவற்றும் குறைவான பயன்பாட்டுடனும் நிலவியமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

(i) திணைக்களத்திற்குச் சொந்தமான 155 உத்தியோகபூர்வ இல்லங்கள் காணப்படுவதுடன், அதில் 51 உத்தியோகபூர்வ இல்லங்கள் வாடகைக்கு வழங்கப்பட்டும், 89 இல்லங்கள் சிதைவடைந்த நிலைமையிலும் 15 இல்லங்கள் வாடகைக்கு வழங்காமலும் காணப்பட்டன.

(ii) அநுராதபுரம், ஹம்பாந்தோட்டை மற்றும் மொனறாகலை ஆகிய மூன்று மாவட்டங்களுக்குரிய 12 டோசர் இயந்திரங்கள் ஆண்டு முழுவதும் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டன. மேலும் அநுராதபுரம் மாவட்டத்தில் டோசர் இயந்திரமொன்று மீளாய்வாண்டினுள் 5 மணித்தியாலங்களை விட குறைந்த காலப்பகுதியிலும் மொனறாகலை மாவட்டத்தின் டோசர் இயந்திரமொன்று 72 மணித்தியாலங்கள் மாத்திரம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுமிருந்தது.

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்தப்படுதல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிதிப் பிரமாணம் 757(2) இன் பிரகாரம் வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 13 மாவட்ட அலுவலகங்களினதும் தலைமை அலுவலகத்தினதும் மீளாய்வாண்டிற்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கை 2015 யூன் 25 திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) திணைக்களத்திற்குச் சொந்தமான வாகனங்கள், புல்டோசர் இயந்திரங்கள் தொடர்பான வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கையொன்று மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. இதன் காரணமாக திணைக்களத்திடமுள்ள சொத்துக்கள் ஒழுங்கு முறையாக காணப்படுவதனையும் ஒதுக்கீட்டுக் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள நட்டம் தொடர்பான கூற்று மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்கள் அசைவு தொடர்பான கூற்றின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கும் முடியாதிருந்தது.

(iii) 2004 ஒக்தோபர் 14 ஆந் திகதிய 174 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் சொத்துக்களுக்குரிய குறியீடுகள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(iv) போக்குவரத்து பிரிவிலிருந்து சமர்ப்பிக்கப்பட்டிருந்த அறிக்கைகளின் பிரகாரம் திணைக்களத்திடம் 133 வாகனங்கள் காணப்பட்ட போதிலும், அது தொடர்பான விபரமான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

(v) திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கைதவிர்ப்பதற்கு உத்தேச உழவு இயந்திரங்கள் மற்றும் விவசாய உதிரிப்பாகங்கள் பட்டியலின் பிரகாரம் 04 சக்கர உழவு இயந்திரங்கள் 183 உம், டேலர் 92 உம், இரண்டு சக்கர உழவு இயந்திரங்கள் 85 உம் ஏனைய விவசாய உபகரணங்கள் 254 உம் மோட்டார் சைக்கிளொன்றும் லொறியொன்றும் கெப் வண்டியொன்றும் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன், கைதவிர்ப்பு நடவடிக்கைகள் 2015 யூன் 15 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**(இ) ஏனைய தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

மீளாய்வாண்டில் ரூபா 8 மில்லியன் பெறுமதியான மோட்டார் வண்டியொன்று முறையற்ற விதத்தில் வேறொரு நிறுவனத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணக்கமின்மைகள்**

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றிற்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) நியதிச்சட்ட ஏற்பாடுகள் | | |
| 2000 இன் ஆகஸ்ட் 18 ஆம் திகதிய 46 ஆம் இலக்க கமத்தொழில் அபிவிருத்தி அதிகாரச்சட்டம் | | |
| 32 மற்றும் 33 ஆம் பிரிவுகள் | | அத்துமீறிய வயல் நிரப்பல் முறைப்பாடுகள் 391 ஆக இருந்ததுடன், வழக்கு தொடரல் இணக்கப்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டிருந்த முறைப்பாடுகள் 64 ஆக இருந்தன. |
| 43 ஆம் பிரிவு | - | சகல விவசாய அமைப்புக்களும் பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும் 1,846 விவசாய அமைப்புக்கள் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் கோவை | | |
| நிதிப்பிரமாணம் 342(1) | - | பொதுப் பற்றுச்சீட்டு புத்தகங்களைப் பாதுகாப்பாக வைத்திருப்பதற்குப் பதிலாக பாதுகாப்பற்ற விதத்தில் குவித்து வைக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் கமநல சேவை நிலையங்களில் தெரிவு கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன. |
| நிதிப்பிரமாணம் 396 | 3,158,444 | 14 மாவட்ட அலுவலகங்களின் வங்கிக் கணக்குகள் மற்றும் தலைமை அலுவலக வங்கிக் கணக்கில் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வழங்கப்பட்டு ஆனால் கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாத காலாவதியான காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை | | |
| 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2.11 ஆம் பந்தி | - | வாகனங்களின் எரிபொருள் நுகர்வு ஒவ்வொரு 06 மாதங்களிற்கு ஒரு முறையும் பரீட்சிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |

(ஈ) அரசாங்க நிதிச் சுற்றறிக்கை
---------------------------

| | |
|---|---|
| (i) 2011 செப்தெம்பர் 27 ஆந் திகதிய 452 ஆம் இலக்க சுற்றறிக்கை - 3.1 உப பந்தி | திணைக்களத் தலைவர் மற்றும் பிரதேச செயலாளரால் பெயரிடப்பட்ட இரண்டு முகவர்களுடன் கூடிய மூன்று பேர் கொண்ட குழுவொன்று மூலம் தகைமையுடைய விவசாய அமைப்பிற்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட வேண்டிய போதிலும், கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்ட அலுவலகங்களினால் அதற்கு முரணாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தன. |
| - 3.2 உப பந்தி | விவசாய அமைப்புக்களுக்கு ஒப்பந்தங்களை கையளிக்கும் போது அங்கீகரிக்கப்பட்ட விவசாய அமைப்புக்களின் நிதி நிலைமை, நிதி வசதிகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பாக உறுதிப்படுத்திக் கொள்ளாமலும் முன்னர் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் தொடர்பான விபரங்கள் இல்லாமலும் ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்தமை களுத்துறை மற்றும் கம்பஹா மாவட்ட அலுவலகங்களில் தெரிவுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. |
| - 3.5 உப பந்தி | விவசாய அமைப்புக்கள் மூலம் மேற்கொள்ளப்படும் நிர்மாணிப்புக்கள் உரிய தரத்துடன் மேற்கொள்ளப்படுவதற்கும் உரிய தொழில்நுட்ப மேற்பார்வையொன்று மேற்கொள்வதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 2009 நவம்பர் 13 ஆந் திகதிய 438 ஆம் இலக்க சுற்றறிக்கை | அரச நிறுவனங்களில் பாவனைக்கு எடுக்க முடியாத சொத்துக்களை கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், நிறுத்திய நிலைமையில் காணப்படும் வாகனங்கள், விவசாய உபகரணங்கள், இயந்திரங்கள் மற்றும் உழவு இயந்திரங்கள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) 2012 பெப்ரவரி 29 ஆந் திகதிய 04/2012 ஆம் இலக்க (விவசாய வங்கி) கமத்தொழில் அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் 4.4.2 ஆம் பந்தி | விவசாய வங்கிக்கு வழங்கப்பட்டிருந்த மூலதனத் தொகைகள் 5 ஆண்டுகளிற்குள் மீளளிக்கப்பட வேண்டிய போதிலும், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மீளச் செலுத்தப்படாதிருந்த நிலுவை மூலதனத் தொகை ரூபா 134,580,855 ஆக இருந்தது. |

**5.8 செயலாற்றல்**

**2014 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க திணைக்களத்தின் செயன்முன்னேற்றம் பின்வருமாறு**

**(அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான செயற்பாடுகள்**

நாடு பூராவும் காணப்படுகின்ற நெல் பயிரிடப்படாத போதும் பயிர்ச்செய்கைக்காக பொருத்தமான நிலைமையில் காணப்படும் செய்கை பண்ணப்படாத வயல் காணிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கில் செயற்படுத்தப்படுகின்ற சிறு நீர்ப்பாசனத் திட்டங்கள் மற்றும் செய்கை பண்ணப்படாத வயல்களை பயன்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டில் 02 மாவட்டங்களில் வேலை ஆரம்பிக்கப்படாத 12 செயற்திட்டங்கள் மற்றும் வேலை பூர்த்தி செய்யப்படாத 313 செயற்திட்டங்கள் உட்பட பூர்த்தி செய்யப்படாத செயற்திட்டங்கள் காணப்பட்டதாக அவதானிக்கப்பட்டது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மாவட்டம் | வேலை ஆரம்பிக்கப்படாத செயற்திட்டங்கள் | வேலை பூர்த்தி செய்யப்படாத செயற்திட்டங்கள் |
|---|---|---|
| மாத்தறை | 11 | 53 |
| கேகாலை | - | 03 |
| புத்தளம் | 01 | 54 |
| காலி | - | 17 |
| குருணாகல் | - | 147 |
| பதுளை | - | 39 |

(ஆ) திணைக்களத்தினால் கீழே காட்டப்பட்டுள்ள செயற்பாடுகள் மீளாய்வாண்டின் போது நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(i) கமத்தொழில் அபிவிருத்தி சட்டத்தின் 29 ஆம் பிரிவின் பிரகாரம் வயல்களை இனங்காணுதல் மற்றும் நெற் பயிர்ச்செய்கை மேற்கொள்ள முடியாத காணிகளாக இனங்காணப்பட்ட வயல் காணிகளில் ஏனைய பயிர்களை பயிரிடுவதற்காக வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டிருக்க வில்லை.

(ii) வயல் காணிகளை இனங்காண்பதற்குரிய வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்படுத்தப்படாதிருந்ததுடன் வயல் காணிகளில் மிகவும் பொருத்தமான பயிர் வகைகளை பயிரிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) திட்டமிடல்**

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 2014 பெப்ரவரி 28 ஆந் திகதிக்கு முன்னர் மாவட்டங்களில் காணப்படும் 02 சக்கர மற்றும் 04 சக்கர உழவு இயந்திரங்கள் தொடர்பான கணிப்பீடொன்றை

மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் காலாண்டில் 250 கமநல சேவைகள் நிலையங்கள் கண்காணிக்கப்பட்டு ஆண்டொன்றிற்கு 1,000 அறிக்கைகளைப் பெற்றுக்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது 393 அறிக்கைகள் மாத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன.

(iii) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் வருடாந்த ஏக்கர் வரி இலக்கு ரூபா 23,465,186 ஆக இருந்ததுடன், மீளாய்வாண்டின் போது சேகரிக்கப்பட்ட ஏக்கர் வரி வருமானம் ரூபா 16,316,322 ஆக இருந்தது.

(iv) விளைச்சல் விற்பனைப் பிரிவின் செயன்முன்னேற்ற அறிக்கை தயாரிக்கப்படாதிருந்தமையால் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திட்டமிடப்பட்ட செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டதா என கணக்காய்வில் உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

## 5.9 வங்கிக் கணக்குகளை செயற்படுத்துவதிலுள்ள குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) வங்கிக் கணக்கிணக்க கூற்றுக்களை தயாரிப்பதில் நீண்ட தாமதம்

ஹம்பாந்தோட்டை கமநல சேவைகளின் மாவட்ட அலுவலகத்தில் மீளாய்வாண்டிற்கான வங்கிக் கணக்கிணக்கம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) சீராக்கப்பட வேண்டிய மீதிகள்

கமநல அபிவிருத்தி திணைக்களத்தினால் 2014 திசெம்பர் மாதத்திற்காக தயாரிக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கிணக்க கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த சீராக்கல்கள் தொடர்பான பகுப்பாய்வின் படி வெளிப்பட்ட தகவல்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| சீராக்கல் விபரம் | | காலப்பகுப்பாய்வு | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | | 06 மாதங்களிற்கு மேல் 01 ஆண்டிற்கு குறைந்த | 01 ஆண்டிற்கு மேல் 03 ஆண்டுகளிற்கு குறைந்த | 03 ஆண்டுகளிற்கு மேற்பட்ட | |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | தீர்வையாகாத வைப்புக்கள் | 420,689 | 900 | - | 421,589 |
| (ii) | வழங்கப்பட்டிருந்த போதிலும் கொடுப்பனவற்காக சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் | 3,116,891 | 37,293 | 4,260 | 3,158,444 |
| (iii) | இனங்காணப்படாத வரவுகள் | 6,447 | - | 63,776 | 70,223 |
| (iv) | இனங்காணப்படாத செலவுகள் | 208,940 | 10.000 | - | 218,940 |

**5.10 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மக்கள் சீனக் குடியரசினால் மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 208 மில்லியன் பெறுமதியான 280 அளவிலான உழவு இயந்திரங்களும் விவசாய இயந்திர உபகரணங்களும் பொருளாதார அமைச்சினால் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன், திணைக்களம் அதற்காக ரூபா 6.1 மில்லியன் செலவிட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இந்த இயந்திர உபகரணங்கள் ஒதுக்கீட்டுக் கணக்கின் நடைமுறையல்லாத சொத்துக்கள் அசைவுக் கூற்றில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன், 2015 யூன் 12 ஆந் திகதி வரையிலும் 210 விவசாய உபகரணங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வயல் காணிகளுக்காக தரவுத் தளமொன்றை தயாரிக்கும் செயற்திட்டத்திற்காக கம்பஹா மாவட்டம் தெரிவுசெய்யப்பட்டிருந்தது. அதற்காக செயற்கை கோள் படங்கள் தனியார் நிறுவனமொன்றிடமிருந்து ரூபா 3,267,840 தொகை செலவு செய்து மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அப்புகைப்படங்களை அடிப்படையாகக் கொண்டு கமநல சேவைகள் நிலையங்களுக்கான தரவுகளைக் குறிக்கும் 1,110 வரைபடங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் போது சேகரிக்கப்பட்டிருந்த வரைபடங்களின் எண்ணிக்கை 67 ஆக இருந்தன. கணனி மயப்படுத்தப்பட்ட வரைபடங்களின் எண்ணிக்கை 20 ஆக இருந்தன.

**5.11 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்**

திணைக்களத்திற்குரித்தான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்த கணக்காய்வுப் பந்திகளில் பின்தொடர் நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டிராத பந்திகளுடனான தொடர்பு பின்வருமாறாகக் காணப்பட்டன.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையுடனான தொடர்பு | | தொடர்புபடுத்தப்பட்ட விடயம் |
|---|---|---|
| **ஆண்டு** | **பந்தி இல.** | |
| 2012 | 2.6(ஆ) | நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

**5.12 முகாமைத்துவ நலிவுகள்**

மீளாய்வாண்டின் போது 170 ஆரம்ப புலனாய்வுகளும் நிதிப் பிரமாணம் 104 இன் பிரகாரம் 15 பரிசோதனைகளும் நடாத்தப்பட்டிருந்ததுடன், முறையான ஒழுக்காற்றுப் பரிசோதனை ஆரம்பிக்கப்பட்டுள்ள எண்ணிக்கை 64 ஆக இருந்ததுடன், முறையான ஒழுக்காற்று பரிசோதனை பூர்த்தி செய்யப்பட்டு ஒழுக்காற்று கட்டளை வழங்கப்பட்டுள்ள எண்ணிக்கை 32 மாத்திரமாக இருந்தன.

**5.13 மனித வள முகாமைத்துவம்**

**(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளபடியான பதவியணி**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி தொடர்பான நிலை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| i. | சிரேஷ்ட மட்டம் | 107 | 79 | 28 |
| ii. | மூன்றாம் மட்டம் | 644 | 466 | 178 |
| ii | இரண்டாம் மட்டம் | 14,371 | 11,734 | 2,637 |
| iv | ஆரம்ப மட்டம் | 425 | 289 | 136 |
| | மொத்தம் | 15,547 | 12,568 | 2,979 |

**(ஆ) ஏனைய தரப்பினருக்கு விடுவிக்கப்பட்ட மனித வளங்கள்**

மீளாய்வாண்டின் போது திணைக்களத்தினால் 04 விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்களும் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தரொருவரும் வேறு அமைச்சொன்றிற்கும் விடுவிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**6. தலைப்பு – 305 – மலைநாட்டு உழவர் மறுசீரமைப்புத் திணைக்களம்**

**6.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை**

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணங்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (i) | திணைக்கள ஒதுக்கீடு (வாக்குப் பண) பேரேடு | நிதிப் பிரமாணம் 447 | நாளது வரையாக்கப் பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

**6.2 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மேலும் அறவிடுவதற்கு அல்லது பதிவழிப்பதற்கு அல்லது விட்டுவிடுவதற்கு உள்ள நட்டங்கள்**

2013 ஆம் ஆண்டின் ஒதுக்கீட்டுக் கணக்கில் மேலும் அறவிடுவதற்கு அல்லது பதிவழிப்பதற்கு அல்லது விட்டுவிடுவதற்கோ உள்ள நட்டங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த 05 ஆண்டுகளிலிருந்து 10 ஆண்டுகள் வரையான காலப்பகுதிக்கான 02 சம்பவங்களுக்குரிய ரூபா 583,946 நட்டம் மீளாய்வாண்டின் கணக்குகளிலிருந்து விடுபட்டிருந்தது.

**6.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று**

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம் வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்த உத்தியோகத்தரொருவரிடமிருந்து 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் ரூபா 137,120 ஆன மீதி மற்றும் வேலையை விட்டுச் சென்ற உத்தியோகத்தரொருவரிடமிருந்து 01 ஆண்டிற்கு குறைந்த காலமாக இருந்து வரும் ரூபா 180,197 ஆன நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.